அலை

34

மார்கழி 1989

ரூபா: 8/-



நினைவின் நீட்சி — சல்வடோர் டாலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் கைகள் ஒன்றாய் எழுக
இன்புறும் உலகம் இங்கெழவே

புதிதாய் எழும் ஓர் உலகம்
கூட்டுறவால் இங்கே நிமிர்க
பிளவுற்றெங்கும் சிதறும் மனிதர்
பிரிவற்றவராய் கையே பிணைக !

வேலணை ப. நோ. கூ. சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வின் மைய உணர்வு

மனவிகாசங்கள்

*" ஓர் எழுத்தாளன் விளைவுகளை எண்ணிப்பாராமல்,
தன் படைப்பு தனது வாழ்நாளில் ஏற்றுக்கொள்ளப்படுமோ, இல்லையா
என்ற கவலையேதுமின்றி, தன் அனுபவத்தின் உண்மையை
வெளியிடக் கடமைப்பட்டுள்ளான்."*

சுந்தர ராமசாமி, ஏ. எஸ். பன்னீர்ச் செல்வனுடன் பேசுகிறார்.

இந்தியன் எக்ஸ்பிரஸ் (செப்ரெம்பர் 21, 1985)
பத்திரிகையில் வெளியான இச் செவ்வியினைத்
தமிழில் தருபவர்: ஸஹீன்.

தலைசிறந்த இலக்கியவாதியொருவர் வெற்றிகரமான வியாபாரியாய் இருக்க முடியுமா? எம்மில் அநேகர் எதிர்மறையிலேயே உடனடியாகப் பதிலளிப்பர். ஆனால், இதனைப் பொய்ப்பித்துவிட்டவர் சுந்தர ராமசாமி. மிகவும் முக்கியமான ஓர் எழுத்தாளர் என க. நா. சுவால் பாராட்டப்பட்ட, மிகவும் கெட்டிக்காரர் என மௌனியால் கருதப்பட்ட சுந்தர ராமசாமி பிரதானமாய் நடை நேர்த்தியாளர் — a stylist

மூன்று பெண்கள் மத்தியில் ஒரே ஆண் மகனாய் 1931 இல் பிறந்த சுந்தர ராமசாமி, பாடசாலை இறுதிப் பரீட்சைக்குப் பின் உடல்நலக் குறைவால் படிப்பை நிறுத்த வேண்டிய நிர்ப்பந்தமேற்பட்டது. 1950க்களின் பெரும்பாலான எழுத்தாளர்களைப் போன்று புதுமைப்பித்தனின் செல்வாக்கால் சுந்தர ராமசாமியின் இலக்கியப் பிரவேசம் நிகழ்கிறது.

அவரது ஒரு புளியமரத்தின் கதை தமிழில் வெளியான தலைசிறந்த பத்து நாவல்களுள் ஒன்றாகக் கருதப்படுகின்றது. அடுத்து ஜே. ஜே. சில குறிப்புகள் இலக்கிய உலகில் பெரும் பரபரப்பையுண்டுபண்ணிய நாவல். இந்நாவலைப் பாராட்டியும், கண்டித்தும் பத்துக் கருத்தரங்குகள், இருபதுக்கும் அதிகமான கலந்துரையாடல்கள், பல்வேறிடங்களில் நடைபெற்றுள்ளன.

பசுவய்யா என்ற புனைபெயரில் சுந்தர ராமசாமி கவிதையும் எழுதுகிறார். நான்கு சிறுகதைத் தொகுதிகளும், ஒரு கட்டுரைத் தொகுதியும் வெளியிட்டுள்ளார். மேலும், மலையாளத்திலிருந்தும், ஆங்கிலத்திலிருந்தும் அநேக சிறுகதைகளையும் கவிதைகளையும் ஒரு நாவலையும் மொழிபெயர்த்துள்ளார்.

நாகர்கோவிலைச் சேர்ந்த பிரபல ஜவுளி வியாபாரியான சுந்தர ராமசாமி மனம் விட்டுக் கதைப்பதற்காகத் தமிழிலேயே பேசவிரும்பினார். அவரது பதில்கள் தற்செயலானவையாய், மேம்போக்கானவையாய் இல்லாமல் அர்ப்பணிப்புடன் எழுதும் ஒரு பொறுப்புவாய்ந்த கலைஞனின் பாரதூரமான அவதானிப்புகளாய் அமைகின்றன.

கலைபற்றிய உங்கள் கண்ணோட்டம் – உங்கள் கலையின் பிரதான நோக்கம் யாது?

"யதார்த்தத்தை ஸ்பரிசிக்கும் மார்க்கமாக நான் கலையைக் கருதுகிறேன். வாழ்க்கை சிக்கலானது; குழப்பமுறச் செய்வது; திகைப்பூட்டுவது; நாம் அதன் அர்த்தத்தைப் புரிந்துகொள்ள முடியாமலிருக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறோம். வெறுமனே வாழ்தல் மட்டும் போதாது. நமது வாழ்வின் உயிர்ப்பான பகுதிகளை நாம் அடையாளங்காணவும் அவற்றை இணைத்தெடுக்கவும், நெருங்கவும் வேண்டியுள்ளது. வாழ்வின் மையப் பொருளை ஸ்பரிசிக்கும் இத்தூண்டலே எல்லாக் கலை வடிவங்களினதும் அடிப்படை''.

''எனது எழுத்தில் நான் என் அனுபவத்தைத் தீர்க்கமாய் விசாரிக்கின்றேன். யதார்த்தத்தைச் சூழ்ந்திருக்கும் பொய்க் கோலத்தைக் களைந்து அதனைத் தரிசிப்பதே எனது நோக்கம். யதார்த்தத்தை எதிர்கொள்வதும், தயக்கமின்றி, திரிபின்றி அதனை அறிவதும் அநேகருக்குப் பிடிப்பதில்லை. இவ் யதார்த்தத்துக்கு முகம் கொடுக்க என்னையும், மற்றவர்களையும் தயார்ப்படுத்துவதாக அமைவனவே என் எழுத்துக்கள்.''

யதார்த்தத்துக்கு முகம் கொடுக்கக் கலை ஒருவரைத் தயார்ப்படுத்த வேண்டும் என்கிறீர்கள். ஆனால் சில வேளைகளில் கலை யதார்த்தத்தில் இருந்து விலகியதாகக் காணப்படுகின்றதே, இதற்கு நீங்கள் தரும் விளக்கமென்ன?

''அவ்வாறு காணப்படலாம். கலை வாழ்க்கையை அவ்வாறு முன்வைப்பதில்லை. வாழ்வின் சாரத்தைக் காணும் எனது முயற்சியும் ஏனைய எழுத்தாளர்களுடைய முயற்சியும் ஒரே விதமாய் இருக்க வேண்டும் என்றில்லை. வாழ்க்கையின் விகசிப்பு அர்த்தமற்ற கணங்களில் தன்னை இழப்பதுண்டு. அதன் சாரத்தை ஸ்பரிசிப்பதற்கு அனுபவங்களைத் தேர்ந்தெடுக்கவும், ஒழுங்கமைக்கவும் வேண்டியுள்ளது. ஆனால் வாஸ்தவதத்தில் அது, அதன் அசல் முக்கியத்துவத்தைக் காண்பதற்கான வாழ்வின் பதிவேயன்றி, கொச்சைப்படுத்துதல் அன்று. வாழ்க்கை பல பரிமாணங்களைக் கொண்டது. வாழ்க்கையுடனான மனிதனின் உறவு மாறும் பொழுது பரிமாணங்களும் மாறுகின்றன — புதிய பரிமாணங்களும் புதிய அர்த்தங்களும் உண்டாகின்றன. யதார்த்தம் என்பது இன்னதென்று முடிந்த முடிபாக என்னால் எதுவும் கூறமுடியாது. ஆனால் மகத்தான கலை — எமது அனுபவத்தைச் சீர்ப்படுத்துவதில் அக்கறை கொண்டுள்ள வரையில் — எம்மை அந்த யதார்த்தம் நோக்கி இட்டுச் செல்கின்றது; அது பற்றிய உணர்வை எமக்களிக்கின்றது.''

வாழ்க்கை பற்றிய உங்கள் கண்ணோட்டம் யாது?

''உண்மைத் தேடலே வாழ்க்கையின் மிக முக்கிய பணியென நான் கருதுகின்றேன். எமது பிறப்பு, வளர்ப்பு, கல்வி, சமூக அந்தஸ்து யாவும் கணிப்பிட முடியாதபடி எம்மைப் பக்கச்சார்பு கொண்டோராக ஆக்கியுள்ளன. யதார்த்தத்தை ஸ்பரிசிக்க முடியாமல் அவை எம்மைத் தடுக்கின்றன. உண்மை எளிமையானது, எமக்கு மிகவும் அண்மையிலிருப்பது. எனினும் எமது சாதாரண அன்றாட விவகாரங்களில் அதனை நாம் புரிந்து கொள்ளத் தவறிவிடுகிறோம். ஒரு எழுத்தாளன் விளைவுகளை எண்ணிப் பாராமல், தன் படைப்பு தனது வாழ்நாளில் ஏற்றுக் கொள்ளப்படுமா இல்லையா என்ற கவலையேதுமின்றி, தன் அனுபவத்தின் உண்மையை வெளியிடக் கடமைப்பட்டுள்ளான். அதேவேளை தேவைப்படின் தன் பார்வைகளை மறு பரிசிலனை செய்து மாறுபட்ட அபிப்பிராயங்களின் மதிப்பீடுகளைக் காண்பதற்கு அவன் ஆயத்தமாயிருத்தல் வேண்டும். அவற்றைத் தழுவித் தனதாக்கிக் கொள்ளும் அகன்ற பார்வை அவனுக்கிருக்க வேண்டும். ஓர் எழுத்தாளன் வாழ்வோடும் மனிதத்தோடும் தீவிர ஈடுபாடு வைத்திராவிடின் அவன் உயர்ந்த உண்மைகளைக் காண அடிப்படையிலேயே இயலாதவனாகின்றான்.''

நீங்கள் ''பரிபூரணம்'' என்பதனைக் காண விழைகின்றீர்கள் என்ற அபிப்பிராயம் உங்கள் எழுத்துக்களிலிருந்து ஒருவருக்கு ஏற்படுகிறது. அப்படித்தானா? அப்படியாயின் அது சாத்தியமா?

''அத்தகைய அபிப்பிராயம் ஏற்படக் கூடும். எனினும் எனது பரிபூரணம் மதச் சாய்வு கொண்டதல்ல. கடவுள் பற்றிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்பாடெதுவும் அதில் அடங்கியிருக்க வில்லை. வாஸ்தவத்தில், என் அக்கறை அதுவன்று. மறுபுறம், வாழ்வும் அதன் போதாமையும் என்னைக் கவலை கொள்ளச் செய்கின்றன. வளமான வாழ்வுக்கான அனைத்து சாத்தியப்பாடுகளோடும் அதனை நாம் அடைய முடியாமலிருப்பது என்னைத் திக்குமுக்காடச் செய்கிறது, ''பரிபூரணம்'' பற்றிய என் கருத்துருவம் – அதை நோக்கிய என் பயணம் – ஒடுக்குகின்ற இப் போதாமைகளையெதிர்த்து நிற்கும் என் போராட்டமாகத் தெரிகிறது''.

''உண்மை பற்றிய என் தரிசனத்தை உங்கள் முன் வைப்பதே என் கடமை. அப்போதுதான் நான் எழுத்தாளன் எனப் படுவதற்குத் தகுதியுடையவனுவேன். வாழ்க்கைக் களத்தில் இப்போராட்டத்தைத் தொடர்வதற்கு எமது எழுத்துகள் வாசகர்களைத் தயார்ப்படுத்த வேண்டும்.''

எந்தவொரு சமுதாயத்திலும் கலைக்குரிய இணக்கப்பாடு என்ன?

"வரலாற்றுக்கு முந்திய காலத்திலிருந்தே மனிதன் கலைத்துவப் படைப்பில் ஈடுபட்டு வந்துள்ளான். தன் பிரயத்தனங்களில் அவன் பிடிவாதமாயுள்ளான். படைப்பின் போக்கு எளிதானதன்று. படைப்பின் வேதனையை ஒருவர் தவிர்த்துக் கொள்ள முடியாது. என்ற போதிலும் படைப்பு முயற்சியில் மனிதன் பிடிவாதங் கொண்டுள்ளான் என்ற உண்மை அம் முயற்சி அவனது அத்தியாவசியத் தேவையொன்றை நிவர்த்திக்கின்றதென்பதை நிரூபிக்கின்றது. வாழ்க்கையுடனுன எனது உறவை நான் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டியுள்ளது. என்னைப் பற்றிய எனது புலப்பாடுகள் எனது சகஜீவிகள் பற்றிய புலப்பாடுகளைக் கூர்மைப்படுத்த உதவுகின்றன. வெறுமனே வாழ்வதன் மூலம் மட்டுமே வாழ்வு பற்றி எல்லாவற்றையும் தெரிந்து கொள்ள முடியுமென்றால் வாழ்க்கையில் கலைக்கு இடமில்லை. ஆனுல் அப்படியன்று – வெறுமனே வாழ்வதன் மூலம் மட்டும் ஒருவன் திருஷ்டியின் தெளிவையும், நேர்மையையும் பெறுவதில்லை. வரலாற்றுக்கு முந்திய மனிதன் தன் வாழ்க்கையைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்காகவே கலையை சிருஷ்டித்தான். வாழ்க்கையின் பன்முக விகாசங்களை ஸ்பரிசிப்பதற்காகவே நான் என் கலையை உருவாக்குகிறேன்.''

இக்கேள்வி உங்களின் தத்துவ நிலைப்பாடு பற்றி. நீங்கள் முதலில் ஒரு மார்க்ஸீயவாதியாக இருந்தீர்கள். பின்பு ஜே. கிருஷ்ண மூர்த்திமீது நீங்கள் ஆர்வம் காட்டியதுபோல் தெரிந்தது. இப்போது அந்த அக்கறை கூட மங்கிவிட்டது போல் தெரிகிறது. இம்மாற்றங்கள் பற்றி நீங்கள் தரும் விளக்கமென்ன?

''நான் தத்துவவாதியல்லன்: நான் கலைஞன். என் தொழில் தத்துவத்தின் வெற்றிகளை முழக்குவதல்ல. தொடர்பில்லாத தத்துவங்களால் விவகாரங்களைச் சீர்ப்படுத்த முடியாது. மனிதர்கள் மூலம் மட்டுமே தத்துவம் அதன் இயங்கு சக்தியைப் பெறுகின்றது. நிஜவாழ்வில் தத்துவம் உண்டுபண்ணும் தாக்கத்தின் மீதும் அதன் விளைவின் மீதும் நான் கரிசனை காட்டுகிறேன். தன் வாழ்வை மாசுபடுத்திக் கொள்ளும் மனிதன் தத்துவத்தையும் மாசுபடுத்துகிறுன். சகல விதமான சீர்கேடுகளினதும் அடிவேரைக் காண்பதுதான் எனது பிரச்னை. எல்லாக் கேள்விகளுக்கும் மார்க்ஸீயம் விடையளிக்கின்றதென்பது அபத்தமானது. ஜே. கே. தேவையில்லை. நான் என் குழந்தையை இழந்த துயரால் வேதனையுற்றபோது எனக்கு ஆறுதல் கூற மார்க்ஸிடம் ஒன்றும் இருக்கவில்லை; ஆனுல் ஜே. கே, யிடம் ஏதோ இருந்தது. சவால்கள் நெருக்கடிகள், போராட்டங்களினூடே நாம் செல்லவேண்டியுள்ளோம், இவையெல்லாவற்றுக்கும் தனித்தவொரு பரிகாரம் கிடையாது''.

''மார்க்ஸீயம் ஒரு கடுமையான முறை என்பதில் ஐயமில்லை. அதனை நான் கற்றுத் தேர்ந்து விட்டேன் எனச் சொல்ல முடியாது. ஏற்றத் தாழ்வுகளை, கொடுமைகளை, வறுமையை என் பால்யத்திலிருந்தே நான் எள்ளிவந்துள்ளேன். என் ஆர்வங்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதம் யாவையும் துறந்து மார்க்ஸீயத்தின் பால் இயல்பாகவே நான் ஆகர்ஷிக்கப்பட்டேன். அநேக பிரச்னைகளைப் புரிந்துகொள்வதற்கும், அவற்றுக்கு விஞ்ஞான பூர்வமான தீர்வு காண்பதற்கும் மார்க்ஸீயம் ஓரளவுக்கு எமக்கு உதவுகின்றது. ஆனால் எமது கலாசாரமும் மக்களும் பற்றிய உட்பார்வை கொண்ட ஒருவராலேயே மார்க்ஸீயம் உண்மையாகப் பிரயோகிக்கப்பட முடியும். தத்துவத்தை உள்வாங்கிக் கொள்ள நாம் பயிலவேண்டும், எமது வாழ்வின் மாறிக்கொண்டேயிருக்கும் அனுபவங்களினூடு தத்துவத்துடன் எமக்குள்ள உறவைப் புதுப்பித்துக் கொள்ளவும், தேவைப்படும்போது தத்துவத்தைத் தாண்டிச் செல்லவும் நாம் கற்றுக்கொள்ள வேண்டும். நிஜஅனுபவம் பற்றிய எத்தகைய கரிசனையுமின்றி எந்தவொரு தத்துவத்தையும் சாகும்வரை சுமப்பது பெருமைப்படக்கூடியதல்ல.''

கவிதை பற்றிய உங்கள் கருத்தென்ன? புதுக்கவிதை இயக்கத்தை நீங்கள் வரவேற்பது ஏன்?

''கவிதையைச் சுவைத்து மகிழும் அதே வேளை அதன் அமைப்பு இன்னதென என்னால் திட்டவட்டமாகக் கூற முடியாது. மகத்தான கவிதையைப் படிக்கும்போது, ஏதோவொன்று என்னைத் தொடுகிறது; எனது சில பகுதியை விழிப்புக் கொள்ளச் செய்கிறது என்பதை மட்டும் நானறிவேன். பாரதிக்கும் பாரதிதாசனுக்கும் பிறகு தமிழ்க் கவிதை தேக்கமடைந்தது. நவீன காலத்துடன் இம்மியும் ஒட்டுறவு கொள்ளாதவர்களால் அது பயிலப்பட்டு வந்தது. காலாவதியான மரபை அவர்கள் தொடர்ந்தனர். நிகழ்காலத்துடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டு கவிதை உயிரற்றுப் போயிற்று — காலத்தின் சவாலை எதிர்கொள்வதற்காக, கவிதையைக் காலத்துடன் தொடர்புபடுத்துவதற்காகத் தமிழில் புதுக்கவிதை இயக்கம் தோன்றியது. மிகுந்த வெறியோடு அவ்வியக்கத்துடன் நான் சம்பந்தப்பட்டிருந்தேன். அதனால் உந்துதல் பெற்று கவிதையெழுதினேன்.''

''என்றபோதிலும் நானொரு சிரேஷ்ட கவிஞனல்லன் என்பதை நானறிவேன். என்னைவிடச் சிறந்த கவிஞர்கள் பலருண்டு. ஆனால் இன்றைய கவிஞர்கள் எல்லோரும் சிறு கவிஞர்களே (Minor Poets). முக்கியத்துவம் வாய்ந்த பெருங்கவிஞனொருவன் தோன்றும்போது இவ்வுண்மை பிரத்தியட்சமாகும். அவனது வருகைக்கான தளம் மட்டும் இப்போது தயாராகியுள்ளது. மொழி, இலக்கணம் அல்லது பாடுபொருளில் கூட அவன் புதுமையெதுவும் புரியத் தேவையில்லை. அவனுக்கான தளத்தை அந்தளவு நாம் தயாரித்து விட்டோம். விரும்பியதை அவன் விரும்பியபடி எழுதலாம். சிறு கவிஞர்களால் இச்சாத்தியப்பாட்டை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள முடியாது.''

உங்கள் கவிதையில் நீங்கள் எளிமையில் கவனஞ் செலுத்துகிறீர்களா?

''நான் என் எழுத்தைப் புதுப்பித்துக் கொண்டே வருகிறேன். என் சிறுகதைகள் எளிமையாயிருந்தபோது என் கவிதை கடினமாய், சிக்கலானதாயிருந்தது. வேறு வார்த்தைகளில், என் எழுத்தின் ஒரு பகுதி தொடர்ந்து கடினமாயும் சிக்கலாயுமிருந்து வருகிறது. என்றபோதிலும் ''ஜே. ஜே.'' யில் சிக்கலான சிந்தனைகளைத் தெளிவுடனும் எளிமையுடனும் வெளியிடுவதில் நான் வெற்றி பெற்றுள்ளதாக நினைக்கிறேன். என் எழுத்துகள் பெருவாரியான வாசகர்களைப் போயடையும் வகையில் இப்பொழுது எளிமையில் கவனஞ் செலுத்துகிறேன். ஆனால் எளிமையைக் கருதும் அதேவேளை எழுத்து கலையாக இருக்க வேண்டும். எனினும் வாசகர் மீது தாக்கத்தையேற்படுத்துவதற்கான தேவையை உண்மையில் உணர்கிறேன்.''

''தமிழுலகம் உறங்கிக் கிடக்கின்றதென்றே நான் கருதுகின்றேன். கருத்துலகில் அது ஏனைய இந்திய மொழி கலாசாரங்களிலிருந்து பின்தங்கியுள்ளது. எமக்கும் ஏனைய உலகுக்குமிடையே காணப்படும் இடைவெளியை காலக்கணக்கில் சொல்வ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயின் என் அபிப்பிராயப்படி ஒரு நூற்றுண்டுக்கும் அதிகமாகும். நாம் வணிக மதிப்பீடுகளால் ஆளப்படுகிறேம். கெடுதியான இவ்வளவீடுகளுக்கெதிராய் ஒன்று திரண்ட தாக்குதல் தொடுக்கப்படல் வேண்டும். எனது முப்பதாண்டு கால எழுத்துப் பணியில் ஐயாயிரம் வாசகர்களேனும் எனக்குக் கிடைத்திருப்பார்களென்பது சந்தேகமே. இன்னும் அதிக அளவில் நான் வாசகர்களைப் பெறவேண்டுமென்பதே என் விருப்பம். உண்மைக் கலையின் அர்த்தத்தைக் காணவும், கருத்துருவச் சிந்தனைப் பரிச்சயத்துக்காகவும் அவர்களை விழிப்புக் கொள்ளச் செய்வது என் பணியின் ஒரு பகுதியாகுமென நான் கருதுகிறேன். கலை, இலக்கியம், அரசியல், சினிமா, நாடகம் என்று நீங்கள் எதனைக் குறிப்பிட்டாலும், மூன்ருந்தரமானவைகளே எங்கிலும் அரியாசனமேறியுள்ளன. கல்வி, அரசு, மக்கள் சாதனங்களில் நடுத்தரமானவைகளே பவித்திரமாகப் போற்றப்படுகின்றன. முன்பு நான் என் வாசகர்கள் மீது பொறுமை யிழந்தவனுகவே இருந்தேன். இப்பொழுது நான் அப்படிப் பொறுமையிழப்பது குறைவு. தற்போதைய நிலைமைக்கான காரணத்தைப் புரிந்துகொள்வதன் மூலமே அவர்களின் ஸ்மரணையில் மாற்றத்தைக் கொண்டுவர முடியுமென புரிந்துகொண்டுள்ளேன். என் அன்னை எனக்குக் கற்றுத் தந்த விதம் அவர்களை நான் கற்றுக் கொள்ள விட வேண்டும்.''

கவிதையில் எளிமையில் கவனஞ் செலுத்துவதாகக் கூறுகிறீர்கள். ஆனல் உங்கள் வசனமோ நடைநேர்த்தி மிகுந்ததாய் (highly stylised) உள்ளது. இம்முரண்பாடு பற்றி நீங்கள் தரும் விளக்கமென்ன?

''நான் எதைச் சொல்வதற்கு எத்தனிக்கின்றேனே அது என் வசனநடையைத் தீர்மானிக்கின்றது அது என் எழுத்தின் சிந்தனை உள்ளீட்டின் வெளிப்பாடு. வித்தியாசமாகச் சொல்லப்பட வேண்டிய புதிய விடயங்களுக்கேற்ப அது தன்னை மாற்றிக் கொள்கிறது. இதற்கப்பால் அது கடினமானதென்றே, சிக்கலானதென்றே நான் கருதவில்லை. ஆனல் மக்கள் தொடர்புச் சாதனங்களால் ரசனை கெட்டுப்போன வாசகர்கள் இலக்கியத்தில் மேம்போக்காக எளிமையை எதிர்பார்க்கின்றனர். பௌதிக, இரசாயன பாடநூல்கள் எட்டாம் அல்லது ஒன்பதாம் வகுப்புத் தரத்தில் கூட எளிமையானவையல்ல; அவை எளிமையாயிருக்க வேண்டுமென நாம் எதிர்பார்ப்பதுமில்லை. ஆனல் பட்டப்படிப்பு பயின்ற ஒரு வாசகருக்குக்கூட சிந்தனைக்குச் சற்று வேலை கொடுக்கும் கதையொன்றைப் படிப்பதற்குப் பொறுமை கிடையாது. கவர்ச்சியான நடையில் உணர்ச்சியைத் தூண்டும் ஆழமற்ற மேம்போக்கான நவிற்சிகள் இன்று வெளிவரும் எண்ணற்ற வாராந்தரிகள் மூலம் கரண்டியால் ஊட்டப்படுகின்றன. இத்தகைய சூழ்நிலையில் இவ்வகையான எளிய வாசிப்புக்குப் பழகிப்போன வாசகர்கள் என் எழுத்துக்களைக் கடினமானதாய்க் கருதுவது இயற்கையே. அவை கருத்தூன்றிய வாசிப்பைக் கோரிநிற்கின்றன.

தமிழ்நாட்டில் ஜனரஞ்சகப் பத்திரிகைகளுக்கும் தரமான இலக்கியத்துக்குமிடையே பாரிய பிளவு காணப்படுகின்றது. இவ்விடைவெளியை நீக்க வகை செய்ய முடியுமா?

''பாரிய பிளவு காணப்படுவது உண்மை. பிற இந்திய மொழிகளில் அம்மொழிகள் பற்றியறிந்த நண்பர்களின் அபிப்பிராயப்படி – இவ்வளவு பெரும் பிளவு காணப்படவில்லை. உலகில் வேறெந்த மொழியிலும் இத்தகைய பிளவு காணப்படுகிறதாவென்பது சந்தேகமே. மலையாள மொழியைப் பொறுத்தமட்டில் நிலைமை இதுவன்று என நிச்சயமாக நான் கூற முடியும். தமிழ்நாட்டில் முழுச் சமூகமுமே வணிக மதிப்பீடுகளுக்குப் பலியாகியுள்ளது. சுயவிமோசனத்துக்காகவன்றி லாபநோக்குடன் பிற மொழிகளிலும் சஞ்சிகைகள் நடத்தப்படுவது உண்மைதான். ஆனல் அங்கு வாசகர்களின் கட்டுப்பாட்டில் சஞ்சிகைகள் உள்ளன. அவர்களின் செல்வாக்கு தீர்மானமானது. அங்கு மேம்போக்கான எளிமையை மீறி ஆழமான, நுண்மையான, (புதிய திருட்டாந்தங்களை வழங்குவதில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சவால் விடுக்கும் விடயங்களுக்கு வாசக ஆதரவுண்டு. இங்கோ அத்தகைய வாசகர்களுக்கான தேவையை வணிக சஞ்சிகைகள் வெற்றிகரமாக இருட்டடிப்புச் செய்துள்ளன. வாசகர்கள் காத்திரமான வாசிப்பில் ஈடுபடத் தொடங்கிவிட்டால் இச் சஞ்சிகைகளால் தாக்குப்பிடித்து நிற்க முடியாதென்பதே இதற்குக் காரணம். அருகதையற்றுப்போன சமூக அந்தஸ்தை அப்போது அவை இழக்க வேண்டி நேரிட்டுவிடும்''.

'''மணிக்கொடி' யின் வீழ்ச்சியுடன் சரியத்தொடங்கி, 'கல்கி' மூலம் இலக்கியம் லாபகரமான வியாபாரமாய் மாறிவிட்டது. சகல சஞ்சிகைகளும் இவ்வழியைப் பின்பற்றுவதனுல் நம்பிக்கை தரும் எதனையுமே எதிர்பார்ப்பது சாத்தியமற்றுப் போய் விட்டது''.

''உண்மையான ஈடுபாடு கொண்ட எழுத்தாளர்கள் தங்களின் சொந்தக் கலைக் கருவிகளைச் செப்பனிட்டு, சிறந்த காத்திரமான சிந்தனைகளில் நம்பிக்கை கொண்ட வாசகர்களிடம் எடுத்துச் சென்று அதன் மூலம் ஓர் அமைப்பை – அது எவ்வளவு சிறியதெனினும் – உருவாக்க வேண்டுமென விரும்புகிறேன். அத்தகையதொரு வாசக வட்டத்தை உருவாக்குவதன் மூலமே பெரும் விநியோகம் கொண்ட சஞ்சிகைகள் குறைந்த அளவிலேனும் தரமான விடயங்களை வெளியிடும் நிலைமையேற்பட நிர்ப்பந்திக்கலாம்''.

தமிழ் இலக்கியத்தின் இப்போதைய நிலை குறித்து உங்கள் அபிப்பிராயமென்ன?

''தமிழ் எழுத்தின் தரம் இன்று மிகவும் நடுத்தரமானதாகவே உள்ளது. இந்த நடுத்தரம் குறித்த பிரக்ஞை கூட நமக்கில்லை. சில சிறு சாதனைகளை நாம் பெரிதுபடுத்த முனைகிறோம். மௌனி ஒரு முக்கிய எழுத்தாளர் என்பதில் சந்தேகமில்லை. ஆனுல் அவரை நாம் காஃப்காவுடன் ஒப்பிட விரும்புகிறோம். காஃப்காவுடன் அவரை ஒப்பிடமுடியாது. இவ்விதமான சுயபோலித்தனங்களில் நாம் முரண்டுப் பிடியாக இருந்தால் தரங்களை எய்துவது எங்ஙனம்?''

''வாஸ்தவத்தில், உலகின் தலைசிறந்த படைப்புகளோடு ஒப்பிடக்கூடிய நாவலோ, நாடகமோ நம்மிடமில்லை. நமது சினிமா தலைசிறந்த இந்திய சினிமாவின் தரத்தைக் கூட எட்டவில்லை. நாம் பெருமைப்படக் கூடிய ஒரே கலைவடிவம் நம் இசை. கட்புலக்கலைகளின் சில உதாரணங்களையும், சில சிறுகதைகளையும் அத்துடன் நாம் சேர்த்துக் கொள்ள முடியும். தமிழர் பற்றிய சமூகவியல் ஆய்வுக்குக்கூட மேலை அறிஞர்களின் எழுத்துக்களிலேயே தங்கியிருக்க வேண்டிய நிலை நம்முடையது''.

கடைசியாக, உங்களது ''ஜே. ஜே. சில குறிப்புகள்'' பற்றி. அது ஒரு வெற்றிகரமான முயற்சி, ஆனுல் வெற்றிகரமான நாவலல்லவென அநேக வாசகர்கள் கருதுகின்றனர். இவ்வபிப்பிராயம் குறித்து உங்களின் எதிர்வினை யாது?

''ஜே. ஜே. சில குறிப்புகள்'' ஒரு சிறந்த நாவலென நான் கருதுகிறேன். ஏனைய இந்திய நாவல்களுடன் ஒப்பிடும்போது ''ஜே. ஜே.'' ஒரு முக்கிய நாவல். ஆனுல் அது ஒரு மாபெரும் நாவலன்று. இந் நாவல் தமிழில் வெளிவரும்போது காலத்தின் முன்னுல் பல பாத்திரங்கள் வழங்காதொழிந்துவிட்டன. நாவல் நம் காலத்தைச் சித்திரித்த விதம் காரணமாக இது திட்டமாய் நிகழ்ந்தவொன்று. காலத்திலிருந்து எவ்வளவு தூரம் நாம் விலகிப் பின்வாங்கிவிட்டோம் என எம்மை உணரவைக்கப் பிரயத்தனிக்கும் இந்நாவல், ஒரு வெற்றிகரமான நாவல் என்பதே என் கருத்து.

''வாழ்க்கையுடனுன எனது உறவை நான் தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டியுள்ளது. என்னைப்பற்றிய எனது புலப்பாடுகள் எனது சகஜீவிகள் பற்றிய புலப்பாடுகளைக் கூர்மைப்படுத்த உதவுகின்றன. வெறுமனே வாழ்வதன்மூலம் மட்டுமே வாழ்வுபற்றி எல்லாவற்றையும் தெரிந்துகொள்ள முடியுமென்ருல் வாழ்க்கையில் கலைக்கு இடமில்லை. ஆனுல் அப்படியன்று. வாழ்க்கையின் பன்முக விகாசங்களை ஸ்பரிசிப்பதற்காகவே நான் என் கலையை உருவாக்குகிறேன்.''

— சுந்தர ராமசாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணற்ற வீதிவழியே.......

சு. வில்வரத்தினம்

மனித நாகரிகத்தின் விழிகளிலே குத்தீட்டி
திசை வெளியெங்கும் குருதிக் கறை பரவ
இற்றை யுகம் இருண்டு போயிற்று.

இன்றைய எங்கள் நாகரிக வீதியிலே
மனிதக் கொல்லிப் பேய்மட்டும் சுதந்திரமாய்
குத்தீட்டிப் பரிவாரங்களும் கூடவே.
கொல்லிப்பேயின் நகம்பட்டுக் கிழியுண்ட
மானுடத்தின் சிதறல்கள் எங்கும் பரவலாய்.

சூனியக் காரன் திருகியெறிந்த கோழித்தலைகளென
கழிப்புக்குவெட்டி விடப்பட்ட நீற்றுக்காய்களென
குருதியில் புரள்கின்றன மனிதத் தலைகள்.
தசைவேறு எலும்புவேறு தலைவேறு சிதைவுகளாய்
கூறுவிலை போகிறது மனிதநாகரிகம்.

நடுகல் வழிபாட்டில் முளைகொண்ட நாகரிகம்
இன்றோ நடுத்தெருவில் நாயினுங்கும் பிண்டமென
சிதைவுற்றுச் சீரழிய மீந்த சிதைவுகளை
இனங்கண்டு இவைமனிதனவை எனச்சொல்ல
நிபுணர்களின் தேவை மிக அதிகம்.

சந்திஒன்றில் கிடந்தன சிதைவுகள்
ஒரு மனிதன்வந்தான்
சிதைவுகளைச் சீராய்ந்து 'இவை மனிதனவை' என்னவும்
கூடநின்றோர் வியந்தார்
'கொல்லிப்பேயின் நகவிஷம் பாய்ந்த'தென்றான்
'அடஇவன் நிபுணன்தான்' என்றார்.

குருதிக்குள் கிடந்தது அடையாள அட்டை
எடுத்தார் துடைத்தார் சிதைவின் முகம்கண்டு
முகவரியும் கண்டு சொன்னார்.
சிதைவுற்றவைக்கெல்லாம் இங்குசெட்டை முளைப்பதுண்டு
செய்தி பறந்ததெங்கும்
உறவுகள் ஓடிவந்தார்.

அடையாள அட்டைவாங்கிப் பரிசோதித்து அறிந்தபின்னால்
சிதைவுகளைச் சேகரித்து சாக்குப் பையொன்றில் இட்டுச்சென்றார்
ஊர்நின்று எல்லாம் உற்றுக் கவனித்த பின்னால்
உறைந்துபோன குருதியை மண் அள்ளி
மூடுகிற பெரியபணி முடித்துக் கலைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2

சாப்பறையில் கம்புபட்டும் அதிராத
காலை விடிந்தது கண்விழித்த ஊர்
ஆறஅமரத் தம் கடன்களைக் கழித்தபின்பு
சாவீட்டில் போய்க் கூடிற்று.

சப்பாணி கொட்டி அமர்ந்தவர் நடுவே
வெற்றிலைத்தட்டமும் 'மெல்ல' அமர்ந்தது
சாவதானமாய் நீவிஎடுத்து காம்பும்நீக்கி
வெற்றிலை மெல்கையில் சுவை சேர்க்க
ஊர்ப்புதினங்களையும் சேர்த்துக் கொண்டது;
அவ்வப்போது துப்பியும் கொண்டது.

ஓலங்கள், ஒப்பாரி, பிலாக்கணம் எழுந்தது
யாரையும் பாதிக்காமலே காற்றிலேசென்றது
கொல்லிப்பேயின் கொக்கரிப்பென்ன
கொட்டும் பறை முழக்கம்
விட்டு விட்டு இடை வீங்கி எழுந்தது.

'பொற்சுண்ணம் இடித்து நாமே'
பந்தலில் இருந்து பாட்டுக் கேட்டது
அரப்பெண்ணெய், வாய்க்கரிசி என்று
ஆலாய்ப் பறக்கின்றனர் பலரும்
அவரவர்பங்குக்கு மீந்த வற்றை
பிய்த்துத் தின்னுவார் போல.
பிணச்சடங்குச் சம்பிரதாயிகள் நடுவே
கொல்லிப்பேயும் நின்று பல்லைஇளிக்கிறது
பச்சை ஊன்நாறும் வாயோடு.

ஊதுபத்தி, கர்ப்பூரம், தைலவாசங்களை மீறி
பிணவாடை வீசிச் சுழிக்க
கூடநின்றோர் வயிற்றைக் குமட்டுமாப் போல்
முகஞ் சுழித்து அப்பால் நகர,

பிணநாற்றக் கலாசாரப் பேயின்வாய் திறந்ததென
பிரேதப் பெட்டி வாய்திறக்க
குடிபோயிற்று மானுடத்தின் மூளி.
பெட்டிவாய் மூடிக் கொள்ளவும்இப்போது
நீண்டு நிமிர்ந்தஒரு பொய்த்தோற்றம் ஆயிற்று.
பெட்டியின்மேல் விழுந்து புரண்டுஅழுதாரின்
போலிஎதிர்ப்பை புறங்கையால் தள்ளிவிட்டுப்
பாடை எழுந்தது வீட்டின் மூலையினை
மூன்று தடவை முட்டி விலகியது.

சுடலைக்குப் பிணத்தைக் காவுவதில்
முன்னுரிமைகோரி சச்சரவு நேர்ந்து
சாம்பிணங்கள் சண்டையிட
ஆள்மாறித் தோள்மாறித் தடுமாறித்தள்ளாடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செத்த கலாசார ஊர்வலம் நகர்கிறது
காலப் பறையோ கைகொட்டி முன்நகரும்.

கூலிக்குத் தேவாரம் பாடுவோர்
கொள்ளிக்குடம் சுமப்போர் முன்ஏக
நாவிதனும் நெல்லுப்பொரி எறிந்தபடிபோக
பாடைநிழலோரமாய் பொரியைக் கொறித்தபடி
நாகரிகக் கொல்லிப் பேயும்நகர்வதனை
யாருமே காணுமல்
செத்த கலாசார ஊர்வலம் நகர்கிறது
காலப் பறையோ கைகொட்டி முன்நகரும்.

காலம் நகர்ந்து போய் மேற்குஅடிவானில்
தீமூண்டெரியும் சிதைபோல் தெரிகிறது
சுடலையிலே மானுடத்தின் சிதைவிலும்
தீமூளத் தொடங்கிறது.

சிதையின் தீவெக்கை தீண்டாத் தொலைவில்
நிழலில் இருந்தபடி ஞானங்கள் பேசியவர்
சப்பிய வெற்றிலை எல்லாம் துப்பிவிட்டு
தமக்குமட்டும் 'ஆயுசு நீளம்' என்றறினைப்போடு
எழுந்து நடக்கின்றார் எரியாப் பிணங்களென.

நகர்கின்றார் சுடலைதாண்டி குறுக்காலே
குச்சொழுங்கை ஒன்றில் விழுகின்றார்
கடுக நடந்துபோய் பெருந்தெருவில் கால்பாவ
'அப்பாடா' என நிம்மதி மூச்செறியவும்
கவடெறிந்து போனது கொல்லிப்பேயா? அதன்
நிழல் விழுந்து நெளிவதனுள்
மின்கம்பமொன்றில் வெடி தீரும்.

ஆயுள் ஒருகால் அங்குலமாய்ச் சுருங்கியதோ?
திடுக்குற்றார்
நரம்புள் சொடுக்கி நறுக்கென்றது
வாழ்வா? சாவின் முனையா?
இவற்றின் தத்தளிப்பில் ரத்தம் ஓடிச்சுண்டிற்று
அக்கணத்தில் அதிசயம்தான் தமக்குள்ளும்
'ரத்தோட்டம்' நிகழ்வது கண்டார்.

கணப் பொறியுள் மின்கம்ப மனிதனவன்
கண் வெளித் தெறித்ததும்
கொல்லிப் பேயதைக் கொறித்ததும் கண்டிலர்
கண்டார் முகத்திரண்டு புண்கள்
குருதிசோர கூனிவளைந்தபடி
மனிதநாகரிகமே கையேந்தி யாசிக்கும்
கோலம் கண்டு தலைகவிழ்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் கண்ணெடுத்துப் பார்த்தார்
மின்கம்பத்தில் கட்டுண்டவன் கைநீண்டு
இதயம்வரை நீண்டுளதையோ ளெறுவதைக்
கண்டஞ்சிப் பார்வை குனிந்தார்
'எம்மிடம் சில்லறை இல்லை' எனும் பாங்கில்.

குனிந்ததலை நிமிரவில்லை
உட்குறுகிச் சுருங்கியது இதயம்விரியவில்லை
நாடிநரம்புகளில் ரத்தோட்டம் திகழவில்லை.
அங்கம் விறைப்பேற அடிபெயர்த்து
நகர்கின்றார் இந்தப் பிரேதமனிதரெல்லாம்.

போகின்றார், வீடென்னும் பொந்தினுள் நுழைகையிலே
புறத்தூய்மை என்னும் ஆசாரம் வழிமறிக்க
நீரள்ளி முழுகி நினைப்பொழிவார்;
நீறள்ளிப் பூசுவார் நீண்டதம்வாழ்வை நினைந்தபடி.

'வயிற்றுக்குத்தானே இத்தனைபாடும்' என்றபடி
வயிற்றைத் திறந்து உள்ளே தள்ளுவார்.
சாப்பாடு தேகத்தைச் சரிப்பதுண்டு
பிரேதம் சயனிக்கும் பின் எழும்
சந்திக்குவரும் மின்கம்பத்தின் கீழே
சிந்தித்தெரியும் சிலதுளிகள் கண்டஞ்சி
மண்தள்ளி மூடும்
நெஞ்சைத்தடவி நிம்மதி மூச்செறியும்
நீண்டதன் வாழ்வை நினைந்தபடி நகரும்.

சாவீட்டுநாகரிகம் சரியாகப் பின்பற்றி
சாவீடு செல்லும் ஏதும் சலனமின்றி
வெற்றிலைத்தட்டத்தை முன் இழுத்தபடி அமரும்
செத்தகலாசாரத்துச் சிதைவுகளை மெல்லும்.

காலநிகழ்வுகளின் உணர்வோட்டம் தீண்டாது
செத்தகட்டைக்கு வார்த்த நீராய் வழியவிட்டு
கட்டைக்குவைத்த தீட்சை கைலாசம் தருமென்ற
செத்தகலாசாரத்தின் செயலிழந்த கூறாக
ரத்தோட்டம் அகச்சூடு, சுரணை, அரிப்பற்று
நாளாந்தவாழ்வில் நடைப்பிணம் நகருது.

குத்தீட்டி மனிதத்தைக் குறிவைத்துத் திரிந்தாலும்
ஏன்என் றொருகேள்வி, ஓர்உட் தூண்டல்
ஒரு எதிர்ப்புக்குரல், கிளர்வு அற்று
குனித்த பார்வை நிமிர்த்தா இவரெல்லாம்
மனிதப் பிறவிகொண்டு சிச்சீ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புற்களும் கூசிநாணிப் புலன்கசியும்
கல்லும் உரசில் கனல்கொள்ளும் இவரோ
வெற்றுப் பிணநுகர்வே வாழ்வென்று
இச்சித்து......
பிரேத மனிதர்க்கெல்லாம் ரத்தச் சூடில்லைகாண்.

ரத்தச் சூடற்ற பிரேத மனிதர்இவர்
நாளும் நகர்கின்ற இந்தச்
செத்த கலாசார வீதியிலே
இன்னும் மனிதநாகரிகமே புண்ணுண்ட விழியோடு
கைநீட்டி எதையோ யாசித்தபடிக்கு......

கண்ணப்பன் ஒப்பதோர்
கண்ணிடத்து அப்பவல்லான் ஒருவனின்
வரவுக்கோ காத்திருக்கும் இன்னும்
இந்தக் கண்ணற்றவீதி வழியே...... (ஜூன் — 1989)

சுவர் உடைப்பு

சுகுமாரன்

உடையுங்கள்
சுவர்கள் அனைத்தையும்
பெர்லின் சுவரை மட்டுமல்ல
சீனப் பெருஞ்சுவரையும்
மனிதர்கள் கட்டிய சுவர்கள் அனைத்தையும்

உடையுங்கள்
ஆயுதபலத்தால் கட்டிய சுவர்களை
குடும்ப உறவைப் பிரித்த சுவர்களை
இரத்த உறவை மறைத்த சுவர்களை
மனிதனை மனிதன் மூடிய சுவர்களை

உடையுங்கள்
கண்காணும் சுவர்களை மட்டுமல்ல
சாணச் சுவர்களையும்
மனிதனை மறைத்த மதச்சுவர் அனைத்தையும்
இதயத்தை மூடிய இனச்சுவர் அனைத்தையும்

உடையுங்கள்
வர்க்கச் சுவர்களை
அறியாமை அரண்களை
மனிதனைச் சூழ்ந்த சுவர்கள் அனைத்தையும்

மனித விடுதலை உடைப்பிலே மலர்க
அடிமை விலங்குகள் அறுபட எழுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கரைக் காற்று —
ஜப்பானிய 'ஹைக்கூ' கவிதைகள்

க. பூரணச்சந்திரன்

ஜப்பான் என்றதுமே பலருக்கு பலவித நினைவுகள் வரக்கூடும். சமூக அக்கறை கொண்டவர்களுக்கு ஜப்பானியர்களின் உழைப்பு, இரண்டாம் உலகப் போரில் அடிபட்டபோதும் அது அடைந்த முன்னேற்றம் நினைவு வரும். இளைஞருக்கு ஜூடோ, கராத்தே போன்ற தற்காப்புச் சண்டை முறைகள், எக்ஸ்போ பொருட்காட்சிகள் நினைவு வரலாம். அழகியல் ஆர்வலர்களுக்கு ஒரிகாமி, இகபானு போன்ற கலைகள்; தாவரவியல் ஆர்வலர்களுக்கு போன்ஸாய் மர வளர்ப்பு முறை ஞாபகம் வரலாம். தத்துவ ஆர்வமுள்ளோர்க்கு 'ஜென்' புத்தசமயச் சிந்தனைகள் எழக்கூடும். இதுபோல இலக்கிய ஆர்வமுள்ளவர்களுக்கு ஜப்பான் என்றதும் 'நோ', 'காபுகி' நாடக வகைகளும், உலகின் முதல் முதல் நாவலான 'கெஞ்சி கதை'யும் 'ஹைக்கூ' கவிதைகளும் ஞாபகம் வருவது இயல்பு.

ஜப்பானிய இலக்கியம் சுமார் ஆயிரம் வருடம் பழமை கொண்டது. தமிழில் எட்டுத் தொகை – பத்துப்பாட்டு என்ற பழந் தொகுப்பு நூல்கள் போல, ஜப்பானிலும் தொகுப்புக் கவிதை நூல்கள்தான் பழமையானவை. தமிழில் நீண்ட கதைப் பாடல்கள் இருப்பது போல ஜப்பானிய 'சோகா' (choka) கவிதைகள். நாட்டுப் புறப் பாடல்கள் 'மின்–யோ' (min-yo). குழந்தைப் பாடல்கள் 'டோ–யோ' (do-yo).

தமிழில் அகவற்பா போல நீண்டு செல்வது ஜப்பானிய 'ரென்கா' (renga) என்ற கவிதைவடிவம். வெண்பா போலக் குறுமையானது 'ஹைக்கூ'. பாரதியார், ஹைக்கூ கவிதைகளைப் பாராட்டியிருப்பதோடு, குறள் வரிகளுடன் இவற்றை ஒப்பிட்டுக் காட்டியுள்ளார்.

ஜப்பானியர்களுக்கு 5 அசை, 7 அசை கொண்ட அடிகளை அமைப்பது மரபு. ஜப்பானிய கவிதை வடிவங்களில் புகழ் பெற்றவை 'டன்கா'வும், 'ஹைக்கூ'வும். 'டன்கா' என்ற கவிதை வடிவம் 31 அசைகள் கொண்டது. இவை 5 அசை – 7 அசை – 7 அசை – 7 அசை – 5 அசை என 5 அடிகளாக வர வேண்டும். ஹைக்கூ கவிதையும் 17 அசைகள் கொண்டது. முதல் அடியில் 5 அசைகள்; இரண்டாம் அடியில் 7 அசைகள்; மூன்றாம் அடியில் 5 அசைகள் என்பது இதன் யாப்பு வடிவம்.

இந்த 'ஹைக்கூ' என்ற கவிதை வடிவம் ஒரு அற்புதமான விஷயம். இயற்கையான, கட்டுப்பாடில்லாத, பொருளமைப்பு. 3 வரியிலேயே இதயத்தைக் கவ்விப் பிடிக்கும் கம்பீர வடிவம் கொண்டவை. ஒரே ஓட்டமாக இல்லாமல் தத்தித் தத்தி ஓடுபவை. 2 அடிகள் படித்ததும் நிற்க வேண்டும். ஒரே மூச்சில் வாசித்துவிடக் கூடாது. இரண்டு அடிகள் படித்து கொஞ்சம் யோசித்து, மூன்றுவது அடிக்குச் செல்ல வேண்டும். சான்றாக, மோரி டாகே என்ற கவிஞரின் ஒரு ஹைக்கூ:

> உதிர்ந்து வீழ்ந்த மலர்
> கிளைக்குத் திரும்புகிறது.

இவை முதலிரு வரிகள். நாம் உடனே யோசிக்கிறோம். எப்படி உதிர்ந்த சருகு மலர் கிளைக்குத் திரும்ப முடியும்? விந்தையாக அல்லவா இருக்கிறது? இதோ வருகிறது மூன்றுவது அடி:

> ஓ! பட்டாம் பூச்சி.

நம் திகைப்பு விடுபடுகிறது. எவ்வளவு சுகமான சிந்தனை! இதுதான் ஹைக்கூவின் வடிவ அமைப்பு. மூன்றே வரிகளில் ஒரு பிம்பம் உருவாவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இந்த மாதிரி ஒரு அழகான பிம்பத்தைத் தோற்றுவிப்பதுதான் ஹைக்கூ வின் பயன் என்று நினைக்கலாகாது. கவிதை என்பது சிந்திக்கத் தூண்டுவது. கவிஞனின் படைப்புப் பணியில் வாசகனை யும் பங்குகொள்ள வைப்பது. ஹைக்கூ கவிதை ஒவ்வொன்றும் ஆழ்ந்த உட் பொருள் – உள்ளுறைப் பொருள் கொடுப் பது. மேலே கண்ட கவிதைக்கும் ஆழ்ந்த உட்பொருள் உண்டு.

செரி மரத்துப் பூக்கள், ஜப்பானில், வசந்த காலத்தின் சின்னம். எனவே உதிர்ந்து வீழ்ந்த மலர், வசந்தம் சென்று விட்டதை, மரத்தின் இழப்பை உணர்த்து கிறது. இயற்கை, அந்த இழப்புக்கு ஈடு செய்கிறது – பட்டாம் பூச்சியை அந்தக் கிளைக்கு அளித்து அழகை ஈடுசெய்கிறது. இது ஒரு உட்பொருள்.

ஹைக்கூ கவிதை, ஜென் சிந்தனையிலிருந்து தோற்றம் பெற்றது. ஜென் கருத்துகள், மேல் – தோற்றத்திற்கு புரியாத தன்மை யும், ஆழமான பன்முக அனுபவங்களும் கொண்டவை. இதே ஆழம் ஹைக்கூவிலும் உண்டு. மேற்கண்ட ஹைக்கூவும், வாழ்க் கையில் இழப்புகள் தற்காலிகமானவை என் பதையும், இழப்புகள் மீண்டும் ஈடுசெய்யப் படுவதே வாழ்வென்றும் விளக்குகிறது. இன்னும் பலவிதப் பொருள்களும் இதற்குக் காணலாம்.

பொதுவாக, ஹைக்கூ கவிதைகள் அதிர்ச்சி மதிப்பு உடையவை – ஓ ஹென்றி கதைகளைப் போல, முதலிரு அடிகளில் ஒரு அழகிய பிம்பம். மூன்றாவது அடி ஒரு 'ஷாக்' தருகிறது சான்றாக:

''இந்த அழகிய மலர்களிடையே
ஒரு மரங்கொத்தி தேடுகிறது''

இவை முதலிரு வரிகள். எதைத் தேடுகிறது மரங்கொத்தி? மூன்றாவது வரியைக் கவனியுங்கள்.

''செத்த மரத்தை.''

இந்த அழகிய உலகிலும் தீமைகளையே, செத்த பழமைவாதங்களையே தேடும் வீணர் களை நினைவூட்டவில்லையா, இந்த மரங் கொத்தி?

ஹைக்கூ கவிதைகள் இறுக்கமானவை; செறிவானவை; அழுத்தமானவை. இவற் றின் முதல் வரிகளில் மாறிச் செல்லும் காலத்தின் – 'மின்னி மறையக் கூடிய' க்ஷணத்தின் – ஓரியல்பு பிடிபட்டு நிற்க வேண்டும் என்பது பொதுவான ஹைக்கூ இலக்கணம். இந்த முதலிரு வரிகளின் இயல்புக்கு மாறான மூன்றாவது வரி–கடைசி வரி – அழகெனும் தத்துவத்தின் நிரந்தர இயல்பை – வாழ்வின் நன்னம்பிக்கையை – உணர்த்த வேண்டும் – சான்றாக: மசாஹிடே என்ற கவிஞரின் ஒரு ஹைக்கூ :

என் வீடு தீப்பட்டெரிந்தது!
இப்போது நன்கு காணமுடிகிறது:
உதிக்கும் நிலவை.

வடிவத்தில் வாமனனாக காணப்பட்டு, அர்த் தத்தில் விசுவரூபம் எடுக்கும் இந்த ஹைக்கூ கவிதையை நேர்த்தி செய்து முழுமையளித் தவர் பாஷோ என்ற 17 ஆம் நூற்றாண்டு ஜென் துறவி. அவரது கவிதைகள் எளிய மக்களின் உணர்வைப் பிரதிபலிப்பவை.

இந்த அழகிய கிண்ணத்தில்
பூக்களை அடுக்கிவைப்போமே!
அரிசிதான் இல்லையே!

இன்னும், யோஸா பூஸான், கோபா யாஷிகி ஈஸா, மஸு ஓகோ ஷிகி, ரைஸான் என்று பல கவிஞர்கள் இந்த வடிவத்தைச் செம் மைப்படுத்தினர். ரைஸானின் கவிதை; மாதிரிக்கு:

நாற்று நடும் பெண்கள்
எங்கும் சேறு.
அவர்கள் பாட்டைத் தவிர.

வாழ்க்கையின் புதிர்த்தன்மையை சில ஹைக்கூ கவிதைகள் மிகச் சிறப்பாக வெளிப்படுத்துகின்றன:

தண்ணீரில் நீந்தும் வாத்து, தன் பிம்பத்தை
பதிக்க முயலவில்லை – தண்ணீரும்
பிம்பத்தை வைத்துக்கொள்ளவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறுகிய வடிவத்திலும், படிம அழகிலும் குறுந்தொகை – ஐங்குறுநூறு போன்ற சங்கக் கவிதையை நினைவூட்டும் இந்த ஹைக்கூ கவிதை, இந்த நூற்றாண்டின் மேலை இலக்கியத்தையும் பாதித்துள்ளது. புதுக் கவிதை தோன்றக் காரணமாக இருந்த 'இமேஜிஸ்டு' இயக்கக் கவிஞர்கள் – குறிப்பாக எஸ்ராபவுண்டு, ரிச்சர்டு ஆல்டிங்டன், டி. ஈ. ஹுல்மே, H. D. போன்றோர் இந்த ஹைக்கூ கவிதையால் பாதிப்புப் பெற்றவர்கள். தமிழ்ப் புதுக்கவிஞர்களிடமும் ஹைக்கூ கவிதையின் தாக்கம் உண்டு. 'ஹைக்கூ'வின் குறுகிய வடிவையும், அதிர்ச்சி மதிப்பையும், ஞானக்கூத்தனின், பின்வரும் சிறிய கவிதை பயன்படுத்தியுள்ளது:

எனக்கும் தமிழ்தான் மூச்சு
ஆனால் அதைப்
பிறர் மேல் விடமாட்டேன்.

ஆனால் இதில் ஜப்பானியப் 'படிமத்தன்மை' இல்லை. நகுலனின் கவிதை ஒன்று:

அலைகளைச் சொல்லிப்
பிரயோஜனமில்லை
கடல் இருக்கிற வரை.

இதில் படிமமும், குறிப்புப் பொருளும் இணைந்துள்ளன. ஜப்பானிய ஹைக்கூ போலவே முரண்பொருள் தன்மையையும், வாழ்வின் சிக்கல் தன்மையையும் பிரதிபலிக்கும் தமிழ்ப் புதுக்கவிதை ஒன்று:

காற்று வராதா என்று
ஜன்னலைத் திறந்து வைத்தேன்
காற்று வந்து
ஜன்னலைச் சாத்திச் சென்றது.

ஹைக்கூவின் சிறந்த பண்புகளைப் பெருமளவு பெற்றுள்ள தமிழ்க் கவிதை ஒன்று – ஆனந்த் எழுதியது:

சற்றைக்கு முன்
ஜன்னல் சட்டமிட்ட வானில்
பறந்து கொண்டிருந்த
பறவை எங்கே?
அது
சற்றைக்கு முன்
பறந்து கொண்டிருக்கிறது.

'ஜன்னல் சட்டமிட்ட வான்' என்ற படிமம் மாறாத நிலைத்தன்மையைக் காட்ட, 'பறந்துகொண்டிருக்கும் பறவை' மாறி வரும் காலங்களுக்கிடையிலான முரண்பாட்டையும், மனிதர்கள் அதற்கு ஈடு கொடுக்க முடியாமல் நிலைத்துவிடுவதையும் காட்டும் குறியீடாகிறது. அப்துல் ரகுமான், அமுதபாரதி போன்றோரும் ஹைக்கூ வடிவத்தில் கவிதைகள் வடித்துள்ளனர்.

ஜப்பானிய ஹைக்கூ கவிதை அமைப்பைத் தமிழில் கொண்டுவரும்போது, மூன்று வரி அல்லது 17 அசை என்பதை விடாப்பிடியாகப் பற்றிக் கொள்ளத் தேவையில்லை. ஏனெனில் ஜப்பானிய மொழியின் தன்மையும் யாப்பும் வேறு. மின்னி மறையும் கணத்தின் பதிவான ஒரு பிம்பத்தையும், அதற்கு மாறான நிரந்தரத்தின் சாயையையும் கவிதையில் கொண்டுவருவதுதான் அவசியம். வெறும் பிம்பங்களின் அழகை மட்டும் திகட்டத் திகட்டப் பதிவு செய்துவிடுவதும் போதாது. வாழ்வின் அர்த்தங்கள் பிடிபட வேண்டும்–உள்ளுறையாக.

ஜப்பானியக் கவிதை மரபில் ரென்கா என்ற நீண்ட கவிதை பல கவிஞர்களால் கூட்டாக இயற்றப்படுவது. அதன் முதல் மூன்றடிகள் விடுதலைபெற்ற வடிவமே ஹைக்கூ. பதினாறும் நூற்றாண்டு வாக்கில் பிரசித்திபெறத் தொடங்கிய இக் கவிதை வடிவம், உலக கவிதை இயக்கத்தையே பாதித்து, தன் கலாசார முத்திரையைப் பதித்துள்ளது. ஜப்பானில் இன்றைக்கும் ஆயிரக்கணக்கான கவிதை மன்றங்கள் ஹைக்கூ படைப்பதில் ஈடுபட்டுள்ளன. ஆனால் கொள்வினை கொடுப்பினை ஒரு வழிப் பாதையில்லையே! இன்றைய ஜப்பானிய ஹைக்கூ மேலைநாட்டுச் சிந்தனைத் தாக்கங்களை அதிகம் பெற்றுள்ளது. இன்றைய ஹைக்கூ ஒன்று:

ஆடுகின்ற இந்தத் தொங்குபாலம்
நகர்பவரால் பிணிக்கப்பட்டு
அமைதியாகி விட்டது;
நமது பின்னப்பட்ட வாழ்வு போல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோபல் இலக்கியப் பரிசும் சர்ச்சைகளும்

சு. மகேந்திரன்

1989 ஆம் ஆண்டுக்கான இலக்கியத் துக்குரிய நோபல் பரிசு, ஸ்பானிய எழுத் தாளரான கமிலோ ஜோஸ் எலா (Camulo-Jose Ella) என்பவருக்கு வழங்கப்பட்டுள் ளது. இவ்விருது 45000 டொலர் பெறுமதி யான ரொக்கத்தையும் ஒரு நோபல் பொற் பதக்கமும், ஒரு அத்தாட்சிப் பத்திரமும் அடங்கியது. ஒக்ரோபர் 20 இல் அறிவிக்கப் பட்ட இப்பரிசு டிசம்பர் 10 இல், ஸ்ரொக் ஹோம் இல் உள்ள கலாசார நிலையத்தில், சுவீடன் மன்னரால் வழங்கப்பட்டது. விருதின் ஸ்தாபகரான அல்பிரட் நோபல் மறைந்த தினம் டிசம்பர் 10 ஆகும். இவ் வகை விருதுகள் பணப் பெறுமானத்தை விட, அவற்றுக்கான குறியீட்டுப் பெறு மானத்தாலேயே மேம்படுகின்றன. குறி யீட்டுப் பெறுமானங்களின் முழு அர்த்தத் தையும் நவீனத் தமிழ் இலக்கியத்தின் முதன்மை எழுத்தாளர்களில் ஒருவரான சுந்தர ராமசாமியின் 'போலி முகங்கள்' என்ற கட்டுரை தெளிவாக விளக்கி உள் ளது. அகிலனுக்கு 'சித்திரப் பாவை' நாவ லுக்காக 'ஞானபீடப்' பரிசு (1974) கிடைக்கப்பெற்ற கால கட்டத்தில் (1976 இல்) பிரக்ஞை இதழில் இக்கட்டுரை இடம் பெற்றது. இதில் நோபல் பரிசு சம்பந்த மான அவரது கருத்தை மட்டும் அப் படியே தருகிறேன்:

''குழு உறுப்பினர்களின் சராசரித் தனமே முடிவுகளுக்கு அடிப்படையாக அமையும் போது, மிகச் சிறந்த தரத்தைக் கொண்டவற்றுக்குச் சாதகமாக தீர்ப்பு அமையாமல், அடுத்தபடிகளுக்கு நழுவும் நிலை ஏற்படும். ஆனால் குழுவின் முடிவு அபத்தமாகத்தான் அமைய வேண்டும் என்ற கட்டாயம் ஏதும் இல்லை. நோபல் பரிசு 1910 இல் இருந்து இன்று வரையிலும் வழங்கப்பட்டு வருகிறது. ஒரு சில வருடங் களில் பரிசு அளிக்கப்படாததையும், சில வருடங்களில் இருவர் பரிசு பெற்றிருப்ப தையும் வைத்து இதுவரையில் எழுபத் தைந்து இலக்கிய ஆசிரியர்கள் தேர்வு பெற் றிருக்கிறார்கள் என்று சொல்லலாம். இதில் பலர் இப் பரிசு பெற்றதன் மூலமே உலகப் பார்வைக்கு வந்தவர்கள். ஜேம்ஸ் ஜாயிஸ், வெர்ஜீனியா வூல்ஃப் ஆகியோருக்கு அளிக் கப்படாத பரிசு பர்ல் எஸ்.பக், ஜான் கால்ஸ்வர்த்தி ஆகியோருக்கு அளிக்கப் பட்டதை குறையாகக் கருதலாம். டி.எச் – லாரன்ஸ் விடுபட்டது மன்னிக்க முடியா தது என்று கருதப்படலாம். சர்ச்சில் படைப்புக் கலைஞரா? அவருக்கு ஏன் அளிக் கப்பட்டது? என்ற கேள்வி எழலாம். எல்லாத் தேசங்களிலும் இப்பரிசு பெறாத ஓர் பெரிய கலைஞன் இருக்கக் கூடும். இவ ற்றை எல்லாம் கணக்கில் எடுத்துக் கொண் டாலும் கூட அறுபத்தைந்து வருடங்களில் (கட்டுரை 1976 இல் எழுதப்பட்டது) அவர்களது மொத்தச் சாதனை மகத்தானது என்பதைப் பரிசு பெற்ற ஆசிரியர்களைப் படிப்போர் உணர இயலும். இன்றும் அக் குழுவின் மேல் நம்பிக்கையும் மதிப்பும், கொள்ளும்படியாகவே அத்தேர்வுகள் இருக் கின்றன''.

இம்முறை பரிசு பெற்ற 'கமிலோ ஜோஸ் எலா' செழுமையும் ஆழமும் கூடிய உரைநடை இலக்கியத்துக்காகப் பரிசைப் பெறுகிறார். வெளி உலகில் அதிகம் அறிமுக மில்லாதவராயினும், ஸ்பெயினில் குறிப் பிடத்தக்க அளவு அறிமுகம் உள்ள நவீன எழுத்தாளர் இவர். உள்நாட்டுப் போர்க் (1937) காலப் பகுதியில் நடந்த அனர்த் தங்களைத் தனது நூல்களில், மிக அழகான கலை வடிவங்களாக வடித்தவர் இவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரின் புகழ்பெற்ற நாவலான பீ – கைவ் (Bee – hive) இல், உள்நாட்டுப் போரில் சிக்குண்ட 'மட்ரிட்' நகரின் அக்காலகட்டத்திய – கொடுமையும் பாரபட்சமும் கொண்ட – சமூகத்தின் முகத்திரையைக் கலை அழகுடன் கிழித்துள்ளார் என்கிறுர், ஜேர்மன் வானெலி அறிவிப்பாளர். அவரது கைதேர்ந்த எழுதும் திறனும் கலை உத்திகளும், காட்சிகள் மிகவும் தடம்புரண்டு ஓடும்போது கூட அழகுறவே அமைந்துள்ளன. இவரின் இக் கலைப்படைப்பால் ஸ்பானிய மொழி சர்வதேச இலக்கியத்துக்கு ஓர் சிறந்த நூலைத் தந்தது என்கிறுர், அவ் அறிவிப்பாளர். இந்நாவல் 1951 இல் வெளியிடப்பட்டும் கூட, 1963 இல் தான் வெளிப்படையாக மக்களை அடைந்தது. பிராங்கோவின் காலத்தில் இவரது முதல் நாவலான 'தி – பமிலி ஒவ் பஸ்காஸ்டுவாட்டி' 1942 இல் வெளியிடப்பட்டு, பின் தடை செய்யப்பட்டது. 1937 ஆம் ஆண்டின் உள்நாட்டு யுத்தத்தையே அடிப்படையாகக் கொண்ட இந்நாவல், அவரது சொந்த ஊராகிய கலிசியாவில் நடைபெறுவதாகச் சித்திரிக்கப்படுகிறது. யுத்தத்தால் பிரியும் ஓர் குடும்பத்தைப் பற்றிய, துக்கமான நாவல் இதுவாகும்.

1916 மே 11 இல் பிறந்த இவர், தாயார் ஆங்கிலேயர் ஆகையால் இளமைக் கல்வியை இங்கிலாந்தில் கற்றவர். இளமையிலே எழுத்துத்துறையில் நாட்டம் கொண்ட இவர் ஆரம்பத்தில் கவிதை இலக்கியத்தில் ஈடுபட்டார். இக்காலத்தில் இவரது கவிதைகளை ரசிப்பதற்கென்று ஒரு சிறு கூட்டமே இருந்தது. பின் பிராங்கோவின் படையில் வலுக்கட்டாயமாகச் சேர்க்கப்பட்டு படுகாயம் அடைந்தவர். நீண்ட காலம் சென்றே காயங்கள் மாறின. இவரது கற்பனை வளம் சனிட்டோரியத்திலேயே அதிகமாக வளர்ந்ததாம். இவர் ஓர் அரசியல் எழுத்தாளராகவே கணிக்கப்பட்டுள்ளார். மேலும் கவிதை, நாவல், பயணக் கட்டுரைகள் என பல்முனைப்புகள் கொண்டவர். தனது நாட்டைப்பற்றிய விமர்சனமும், மனச்சாட்சியும் கொண்டவராகவே இதுவரை வாழ்ந்துள்ளார். எழுத்தாளர்கள் விரும்பினுலும் விரும்பாவிட்டாலும் நாட்டின் மனச்சாட்சியாக இருக்க வேண்டும் என்று கூறும் இவரை, சமீபத்தில் ஸ்பானிய நாடாளுமன்ற உறுப்பினர் ஆக்கியுள்ளார்கள். மேலும் 1987 இல் 'பென்–கிளப்' பின் தலைவர் பதவியும் கொடுக்கப்பட்டு சிறப்பிக்கப்பட்டுள்ளார்.

இம்முறை இவரின் பெயருடன் கிழக்கு ஜேர்மனியின் கிறிஸ்டர் வூல்ப், 'தி புக் சொசைட்டி' யின் பரிசு (1987) பெற்றவரான கிரஹாம் கிரீன், பிரிட்டனின் சர்ச்சைக்குரிய சல்மான் ருஷ்டி என்பவர்களின் பெயர்களும் இறுதிப் பட்டியலில் இருந்தனவாம். சமீபத்திய கிழக்கு ஜேர்மன் அரசியல் வாடையால் கிறிஸ்டர் வூல்ப் பரிசு பெறுவார் என்று, பலர் நினைத்தனர். எனினும் நோபல் இலக்கியப் பரிசுக் குழு பாதுகாப்பான தேர்வாகவும் (safe choice) அதே நேரத்தில் தரம் வாய்ந்தவருக்கும் கொடுக்க முடிவு செய்தார்கள். சல்மான் ருஷ்டியின் பெயர் வந்தபோது உறுப்பினர்கள் எழுந்து சென்றதாகவும், ஈரானின் கொலைப் பயமுறுத்தலே காரணம் என்றும் சொல்கிறுர் சுவீடன் வானெலியின் கலைப் பகுதிக்கான தலைவர். அதைத் தவிர்த்து, இடத்தில் இருந்து கொண்டே புத்தகத்தை விலக்கி இருக்கலாம் என்கிறுர் அவர். மேலும் 'ஜோஸ் எலா' வின் பெயர் இரண்டு மூன்று வருடங்களாக அடிபட்டு வந்ததாகவும் கூறினுர். அறிவிப்பாளர் தொடர்ந்து, மற்றைய எழுத்தாளர்களின் தகுதிகளைக் கூறி, ஏன் பரிசு அவர்கட்கு மறுக்கப்பட்டது என வினவிய போது, கலைப் பகுதிக்கான தலைவர் தமக்கு எந்த அளவில் முடிவுக் குழுவிடம் இவை பற்றிக் கேட்க முடியும் என்பதையும், காரணங்கள் முழுவதும் எல்லோருக்கும் வெளிச்சமாக்கப்படுவதில்லை என்றும் கூறி, தனது பேட்டியை முடித்துக்கொண்டார். எனினும், முடிவு மிகவும் நேர்மையாக நடைபெறும் என்பதைத் தான் திடமாக நம்புவதாகவும் கூறினுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடத்தில், உலகம் முழுவதற்கும் ஒருவருக்கே பரிசு என்னும்போது, சிலர் விடுபட்டுப் போவதுண்டு. ரஞ்சன் குண வர்த்தனவைத் தொகுப்பு ஆசிரியராகக் கொண்டு 'தி ஐலண்ட்' பத்திரிகையில் வெளி வரும் ' தி பெஸ்ட் ஒவ் லிட்ரேச்சர் ' பகுதியிலும் இவ்விடயமாகச் சிறுகுறிப்பு ஒன்று வெளிவந்தது. அமெரிக்க எழுத்தாளர்களான ஷெர்வூட் அன்டர்சன், ரிச்சார்ட் ரைட், ரால்ப் எலிசன் போன்றோர் இவ்விருதில் இருந்து விடுபட்டவர்கள். மேலும், புகழ் பெற்ற பிரெஞ்சு எழுத்தாளர் அன்றி மால்ரோ, இத்தாலியின் இக்னேசியோ சைலோன், ஸ்பானியர்களான அன்டோனியோ மக்காடோ, பியோ பார்யோ, மற்றும் சோவியத் யூனியனின் அன்ன அகமத்தோவா, ஹங்கேரியின் டைபர் டெரி என்போர் தகுதிகள் அத்தனையும் இருந்தும், இப்பரிசினைப் பெறவில்லை. ஆயினும் சிறிது தரம் குறைந்த பொரிஸ் பஸ்டனார்க், ரஷ்யக் கவிஞர் புரோட்ஸ்கி, அமெரிக்க நாவலாசிரியர் யோண் ஸ்டெயின்பேக் என்போர் பெற்றுள்ளனர். தெற்கு ஆசியாவில் கவியரசர் ரவீந்திரநாத் தாகூர் (1913) மட்டுமே இதனைப் பெற்றுள்ளார். 1985 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அமெரிக்கர் 9 பேரும், சோவியத் யூனியனைச் சேர்ந்த நான்கு பேரும், லத்தீன் அமெரிக்க எழுத்தாளர்கள் நால்வரும், யப்பானிய எழுத்தாளர் ஒருவரும், பசுபிக்கில் அவுஸ்திரேலிய எழுத்தாளர் ஒருவரும் இப்பரிசைப் பெற்றுள்ளனர். மற்றையோர் ஐரோப்பியர்கள். சென்ற ஆண்டு ஒரு எகிப்தியர் பரிசு பெற்றார். புகழ்பெற்ற அல்பர்ட் கம்யூஸ் 1957 இல் பரிசுபெற்ற, பிரெஞ்சு எழுத்தாளர்.

உதவி: தி வொயிஸ் ஒவ் ஜேர்மனி;
சுவீடன் வானொலி. ❋

நினைவின் நீட்சி

உலகப் புகழ் பெற்ற சர்ரியலிஸ ஓவியரான சல்வடோர் டாலி, இந்த ஆண்டு ஜனவரியில், தனது 84 ஆவது வயதில் மரணமானார். அவர் வரைந்த புகழ்பெற்ற ஓவியங்களில் ஒன்றே நினைவின் நீட்சி (The persistence of memory) ஆகும். 1931 இல் எண்ணெய்ச் சாயத்தில் வரையப்பட்ட (oil painting) இந்த ஓவியம், நியூயோர்க்கிலுள்ள நவீன ஓவியக் காட்சிச்சாலையில் உள்ளது.

அல்பிரட் ஸ்மெல்லர் என்ற கலை விமர்சகர், தனது சர்ரியலிஸம் என்ற நூலில், இவ்வோவியத்தைப் பற்றி பின்வருமாறு எழுதுகிறார்: ''இந்த ஓவியத்தின் நடுவில் காணப்படும் விசித்திரமான உரு அமைவை – இதன்மேல்தான் சேணத்தினைப் போன்று, மென்மைப்படுத்தப்பட்ட (இளகிய) கடிகாரம் தங்கியிருக்கிறது. – வரையறுத்துத் தெளிவுபடுத்துவதுதான் கடினமானது; அசாத்தியமானதெனக் கூடச் சொல்லலாம். தேய்ந்து அற்றுப்போன கால்களை அல்லது தோலினை உடைய, அல்லது முகத்தைப் போன்ற ஒன்றினைக் கொண்ட உயிர் உருவா இதுவெனப் பொருள்விளக்கம் கொள்வது, வரையறைக்கு உட்பட்டதொன்றல்ல. ஆனால், ஓர் அபிநயம் (சைகை) அல்லது ஓர் மனப்பான்மை என்ற முறையில் இதனைத் தெட்டத் தெளிவாக வரையறுக்கலாம். தளர்வுற்ற, சோர்ந்த, உறுதியற்ற, தளர்ந்து தொங்குகின்ற ஏதோ ஒன்றே அது; அதனால்

(1191 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்டர் ஃபிராங்க்ல் இன் 'இருத்தலியல் வெறுமை'

சிறந்த படிப்பாளியும் ஆய்வாளருமான
திரு. ஏ. வி. அசோக்
மதுரையைச் சேர்ந்தவர்; ஆங்கில இலக்கியம்,
நவீன உளவியல், ஓவியம் என்பவற்றில்
ஈடுபாடு உடையவர்; ஆங்கிலத்தில் எழுதுபவர்.

அவரது கட்டுரையொன்றின் தமிழாக்கத்தை
நிகழ் சஞ்சிகையிலிருந்து
நன்றியுடன் இங்கு தருகிறோம்.
— அலை.

இலட்சக்கணக்கான யூதர்களை நாஜி ஆட்சி கொன்றொழித்த கொடுமையை நாம் மறக்க முடியாது. இப்படிக் கொடுமைக்கும் கேவலத்திற்கும் இரையானவர்களில் ஒருவர்தான், வியன்னாவைச் சேர்ந்த மனநோய் மருத்துவரான விக்டர் ஃபிராங்க்ல் (Viktor Frankl), பிறப்பு 1905. ஆஸ்கிவிட்ச், டச்சௌ - மரணச் சிறைகளில் மூன்றாண்டுகள் அடைக்கப்பட்டார். நாஜிக் கொடுங்கோன்மையிலிருந்து இவர் தப்பினாலும், நாஜி நச்சுக் கூண்டுகளில் தன் மனைவி, தந்தை, தாய், சகோதரர்கள் ஆகியவர்களை இழந்தார். வேதனையும், இழப்பும், அவலமும் மிக்க இந்தச் சூழலில்தான் ஃபிராங்க்லின் 'வாழ்வின் பொருளுக்கான உறுதி' (will to meaning) என்ற மனிதவியல் உளவியலின் முக்கியக் கருதுகோள், பிறந்தது.

மனிதனின் 'மனவியல் பரிமாணம்' (noological dimension–noos என்ற கிரேக்கச் சொல் 'மனம்' எனப் பொருள்படும்) என்பதுபற்றி தீவிர அக்கறை கொண்டுள்ளவர் ஃபிராங்க்ல். 'குறிப்பாக மனிதவியல் பரிமாணம்' அல்லது, 'குறிப்பிட்ட மனித நிகழ்வுப்போக்கு இடம்பெறுவதாகிய மனிதனுள் உள்ள களம்' (அதாவது மனிதன் எனக் குறிப்பிடத்தக்கதான நிகழ்வுப் போக்கு இடம் பெறும் களம்) என்று இதனை அவர் குறிப்பிட்டார். மனிதன் சில தூண்டுதல்களால் அல்லது இயல்பூக்கங்களால் இயக்கப்படுகிறான் என்ற முறையில் மனித வாழ்வுக்கு விளக்கம் தரும் ஃபிராய்டின் கொள்கை இவருக்கு நிறைவு தரவில்லை. வாழ்வில் செயல்படுத்தத்தக்க மதிப்பீடுகள்–வாழ்வில் நிறைவுபெற வேண்டிய பொருள் (அர்த்தம்) என்ற முறையில் மனித வாழ்க்கையை விளக்கும் ஒரு பார்வையை முன்வைத்தார் ஃபிராங்க்ல். ஃபிராங்க்லின் சிந்தனையின் மையம்: 'வாழ்வின் பொருளுக்கான உறுதி' அல்லது 'மனிதன் தன் வாழ்வுக்குப் பொருள் காணும் ஆழ்ந்த தீவிரமான முயற்சி' 'மனிதனைத் தூண்டும் மிக அடிப்படையான சக்தி' என்ற கருத்து. தன்னால் நிறைவுறுத்தப்பட வேண்டிய அர்த்தத்திற்கான அழைப்புக்கு மனிதன் காத்திருக்கிறான். இந்த 'அர்த்தம் தேடும் முயற்சி' ('man's search for meaning') அவனுள் இயல்பாக வெளிப்படுகிறது என்கிறார் ஃபிராங்க்ல். 'மனித வாழ்வின் சாரமே, பொருளியல்பானது,' என்று அறிவிக்கிறார் ஃபிராங்க்ல். விலங்கு எதுவும் வாழ்வுக்கான பொருள் தேடுவதில் அக்கறை கொள்வதில்லை. இத்தகைய பொருள் தேடும் முயற்சி மனிதனின் தனி உரிமை. மனவியல் பரிமாணம் தேடும் இவரது ஆய்வுகள் இவரை இருத்தலியல் ஆய்வாளராகப் புலப்படுத்துகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித வாழ்விலிருந்து பிரிக்க முடியாமல் அதன் அங்கமாக இருக்கிற இந்த 'வாழ்வின் பொருளுக்கான உறுதி', பல சமயங்களில் மறுக்கப்படுகிறது, அல்லது சிதறடிக்கப்படுகிறது. இப்படிச் சிதைவுறும் 'பொருளுக்கான உறுதி' 'இருத்தலியல் வெறுமை' என்ற நிலைக்குக் காரணமாகிறது. இதன் விளைவு 'மனவியல் பரிமாணக் கோளாறுகள்' (noogenic neuroses). 'இருத்தலியல் வெறுமை' என்பது, 'வாழ்க்கையை எது வாழத் தகுதியுடையதாக ஆக்குகிறதோ அந்த இறுதிப் பொருளை – அர்த்தத்தை – முழுமையாக இழத்தல் அல்லது பெறாமை என்ற அனுபவமாகும்.' இந்த இருத்தலியல் வெறுமையின் தோற்றம் பற்றி ஃபிராங்க்ல் விளக்குகிறார்: 'இந்த இருத்தலியல் வெறுமை' மனிதனின் இருவகை இழப்பில் தொடங்குகிறது: ஒன்று, ஒரு விலங்கின் வாழ்க்கையிலுள்ள இயல்பூக்க முறையிலமைந்த பாதுகாப்பு உணர்வை இழத்தல்: மற்றது, தன் முன்னைய காலங்களில் மனித வாழ்வில் ஆட்சி செலுத்திய மரபுகளை அண்மையில் இழத்தல். தற்போதைய நிலையில், மனிதன் தான் செய்ய வேண்டுவது என்ன என்பது பற்றி இயல்பூக்கங்கள் ஏதும் கூறுவது இல்லை. மரபுகளும், அவனுக்கான கடமைகளை நோக்கி அவனைத் தூண்டுவதில்லை, விரைவில் தன் தேவை என்ன என்பதைக்கூட இவன் அறிய மாட்டான். இந்நிலையில் மற்றவர் நடத்தும் வழியில் இவன் செல்வான். இம்முறையில் ஒத்தோடும் மனப்பான்மைக்குத் தன்னை முற்றாக இழந்து விடுவான். இத்தகைய மனவியல் பரிமாணக் கோளாறுக்கான மருத்துவ முறையை ஃபிராங்க்ல் 'பொருண்மை மருத்துவம்' (logo theraphy–logo கிரேக்கச் சொல், பொருள் என்று பொருள்படும்) என்றழைத்தார். மனவியல் நோய்களுக்கான காரணமாக, காம உணர்வுச் சிதைவு, அல்லது 'இன்பத்துக்கான உறுதி'யின் சிதைவு, என்று ஃபிராய்டு கூறியதற்கு மாறாக மனவியல் நோய்க்கான அடிப்படைக் காரணம், 'பொருளுக்கான உறுதி'ச் சிதைவு என்று ஃபிராங்க்ல் கணித்தார். பொருண்மை மருத்துவம், நோயாளியை அவனது வாழ்வுக்கான பொருளைக் கண்டறியத் தூண்டுவதையே தனக்குக் கடமையாகக் கொள்கிறது. தனக்குள் மறைந்திருக்கும் தன் வாழ்க்கைப் பொருளை அவன் உணரும் முறையில் அவனைத் தூண்டும் வகையில், பொருண்மை மருத்துவம் பகுப்பாய்வு முறை ஆகிறது. இந்த அளவில், இம்மருத்துவம், ஃபிராய்டின் பகுப்பாய்வு முறையை (psycho analysis) ஒத்தது. இதற்குமேல் பொருண்மை மருத்துவம் வேறுபடுகிறது. தூண்டுதல்கள், இயல்பூக்கங்களின் நிறைவு, காமம், தான், மனச்சான்று (id, ego, superego) ஆகிய இவற்றுக்கிடையிலான உரிமைப் போராட்டங்களில் ஓர் ஒத்திசைவு, அல்லது, சமூகத்தோடும் சூழலோடும் தக அமைத்துக் கொள்ளுதல்–என்ற இத்தகைய ஃபிராய்டிய மருத்துவ முறையைப் பொருண்மை மருத்துவம் மறுக்கிறது. 'காமம் அல்ல: வாழ்வுக்குப் பொருள் காணுதலே அடக்குமுறைக்கு இரையானது' என்கிறார் ஃபிராங்க்ல். 'இருத்தலியல் மனிதநேய' உன்னதத்தோடு ஃபிராங்க்ல் கூறுகிறார்: 'ஒருவனது வாழ்வுக்குப் பொருள் உண்டா என்று ஐயுறுவது ஒரு இருத்தலியல் அவலம்: இது ஒரு மனநோய் என்பதை விட, இது ஒரு ஆன்மீக வேதனை. தன் வாழ்வுக்குப் பொருள் தேடும் முயற்சி – இந்த வாழ்வுக்கு ஒரு பொருள் இருக்க முடியுமா என்ற ஐயமேகூட மனிதவியல் சம்பந்தப்பட்டதே தவிர நோய்க்கூறானது அல்ல.' பொருளுக்கான உறுதியை மறுத்தல் அல்லது ஏற்காமை, 'இருத்தலியல் வெறுமை'யைத் தோற்றுவிக்கிறது: 'தற்காலத்தின் மக்கள் திரள் மனநோய் இது'; 'இருபதாம் நூற்றுண்டின் மிக விரிவான நிகழ்வுப் போக்கு இது' என்று வருந்துகிறார் ஃபிராங்க்ல்: 'ஒரு மனவியல் மருத்துவர் மேலும் மேலும் இன்று எதிர்கொள்வது, ஒரு புதுவகை நோயாளி: புதுவகை மனநோய்: புதுவகை வேதனை. இந்த நிகழ்வு, மனநோய் மருத்துவரின் செயல்பாட்டில்... செயல்பாடா இது? இல்லை... புனிதக் கடமையில் ஒரு மாற்றத்தைத் தோற்றுவித்திருக்கிறது. – ஒவ்வொரு காலகட்டமும்

அதற்கேயான ஒரு கூட்டு மனநோயைக் கொண்டிருக்கிறது. அதுபோல அதற்கான மருத்துவ முறையும் தேவைப்படுகிறது.'

தற்கால நிலையில் சடங்குத்தனமாக—சிந்தனையற்ற வேலைகளில் ஆழ்தல், பொருட் செல்வத்திற்கான போட்டி, காம உணர்வுப் பெருக்கம் ஆகிய தற்காலப் போக்குகள், 'இருத்தலியல் வெறுமை' யின் முகமூடிகள்: அல்லது பொய்த்தோற்றங்கள்: மனத்தில் உள்ள வெறுமையிலிருந்து அல்லது இருத்தலியல் சிறைவிலிருந்து தப்பும் முயற்சிகள். தற்கால மனிதனின் 'ஞாயிற்றுக்கிழமை மனநோய்' பற்றி ஃபிராங்க்ல் கூறுகிறார். 'வேலை மும்முரம் ஓய்ந்து விட்ட ஞாயிறு' அன்று, தம் வாழ்விற்குப் பொருள் உள்ளடக்கம் இல்லை என்பதை 'தம் வெறுமையைத் திடீரென உணரும் நோய்'. மனத் தளர்ச்சி, போதைக்குப் பலியாதல், வன்முறை, இவை மூன்றையும் 'இருத்தலியல் வெறுமை' யின் வெளிப்பாடுகள் என்றும், இவை 'மக்கள் திரள் மும்மை மனநோய்' என்றும் கூறுகிறார் ஃபிராங்க்ல்.

இந்த வெறுமையை வெற்றிகொள்ள ஒரே வழிமுறை, 'பொறுப்புணர்வு' பெறுதலாகும். 'மனவியல் பரிமாண'த்தின் அச்சு இந்த உணர்வு. மனிதன் என்பவன், முன்பே முற்றாகத் தீர்மானிக்கப்பட்ட—மூடிய—கட்டமைப்பு அல்ல. மனிதன் தன்னைத் தானே தீர்மானிக்கும் உயிரி: சாத்தியப்பாடுகளைத் திட்டமிடக் கூடியவன். பொறுப்புணர்வு என்ற மிக முக்கியமான அவனது மனத்திறன், அவனது சுய தீர்மானத்திற்கும், பொருள் தேடும் முயற்சிக்கும் உதவுகிறது. எவ்வளவில் மனிதன் பொறுப்பானவன்? தன் வாழ்வுக்கான பொருளை நிறைவுறுத்தும் கடமைக்கு அவன் பொறுப்புள்ளவன். வாழ்வுக்குப் பொதுப்படையான பொருள் இல்லை என்கிறார் பிராங்க்ல். குறிப்பிட்ட சூழலுக்கான பொருள்களே உள்ளன என்கிறார். பொதுப்படையான பொருள் தேடுதலைப் பற்றிக் கூறும்போது, ஒரு செஸ் விளையாட்டுக்காரரைப் பார்த்து எது மிகச் சிறந்த இயக்கம் (நகர்த்தல்) என்று கேட்பதைப் போன்றது என்கிறார். குறிப்பிட்ட ஒரு விளையாட்டில் ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் மிகச் சிறந்த நகர்த்தலைப் பற்றித்தான் நாம் பேசமுடியும். மனித வாழ்வுக்கும் இது பொருந்தும். வாழ்வுக்கான பொருள் என்பது, மனிதனுக்கு மனிதன், நாளுக்கு நாள், மணிக்கு மணி வேறுபடுகிறது. வாழ்வுக்கான பொருளை நாம் மூன்று வழிகளில் கண்டறியலாம் என்கிறார் ஃபிராங்க்ல், 1. வாழ்வுக்கு நாம் என்ன தருகிறோமோ அதன் மூலம், (நம் படைப்புச் சாதனை மூலம்). 2. (அன்பு போன்ற) ஒரு மதிப்பீட்டை அனுபவிப்பதின் மூலம். 3. மனிதச் சூழலின் மாற்றவியலாத நிலைகளைப்பற்றி நாம் எடுக்கும் நிலைபாட்டின் மூலம்.

மனிதனின் 'மாற்றவியலாத விதி' யின் பகுதிகள் என 'மூன்று அவலங்களை' ஃபிராங்க்ல் குறிப்பிடுகிறார். அவை துன்பம், குற்றம், சாவு. மாற்றவியலாத நிலைகளை நோக்கிய மனப்பான்மையை உருவாக்கிக்கொள்வது, மனிதனுக்கான மருத்துவ முறை என்கிறார் ஃபிராங்க்ல். செயல்மூலம் நம் விதியை மாற்றவியலாதபோது, அவ்விதி பற்றிய சரியான மனப்பாங்கைப் பெறுதலே தேவை. நம் விதியைக் கட்டுப்படுத்தி அதை மறு உருவாக்கம் செய்ய இயலாதபோது, அந்த விதியை நாம் ஏற்கக்கூடியவராக இருத்தல் வேண்டும்: மனித சுதந்திரம் என்பது, 'மனிதச் சூழலின் நிலைகளிலிருந்து விடுதலை' என்றாகாது, 'மனிதச் சூழலின் நிலைகளைப் பற்றி நாம் நிலைபாடு கொள்ளும் சுதந்திரம்' என்று அழகாகக் கூறுகிறார் ஃபிராங்க்ல்.

படைப்புச் சாதனை, அன்பு என்பதை அனுபவித்தல் பற்றி ஃபிராங்க்ல் கூறுகிறார்: 'மனத்தினுள் சமநிலை என்று கூறுவதைப்போன்ற உள்ளார்ந்த நிலை எதனையும் பற்றி மனிதன் முதன்மையாக ஈடுபாடுகொள்வதில்லை. மாறாக, வெளி உலகிலுள்ள ஏதாவது ஒரு நபர் அல்லது ஒன்று—செய்ய வேண்டிய கடமை, காதலிக்கும் ஒரு துணை—இப்படி ஏதாவது ஒன்றில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் மனிதன் ஈடுபாடு கொள்கிறான். மனித வாழ்க்கை, தன்னை நோக்கியதல்ல. ஏதாவது. ஒன்றை, ஒருவரை நோக்கிச் செலுத்தப்படுவதே. 'ஒரு பொருளை நிறைவுறுத்தல் அல்லது இன்னொரு மனிதரை அன்போடு எதிர் கொள்ளல் – இப்படிச் செயல்படுவதே'. இத்தகைய திசைவழியை, 'தன்னைக் கடத்தல்' என்கிறார் ஃபிராங்க்ல்.

தன்னைக் கடத்தலின் ஒரு பக்க விளைவே 'தன்னை நிறைவுறுத்தல்' என்கிறார் ஃபிராங்க்ல். 'தன் வாழ்வின் பொருளை நிறைவுபடுத்துவதற்காகத் தன்னை ஒருவர் ஈடுபடுத்திக்கொள்ளும் அளவிற்கே, தன்னை அவர் நிறைவுறுத்திக் கொள்கிறார்.' ஃபிராங்க்லைப் பொறுத்த வரை, மனிதனுக்குத் தேவைப்படுவது, நெருக்கடியற்ற மனநிலை அல்ல : வாழ்க்கைப் பொருளை நிறைவுறுத்தலுக்கான அழைப்புக்குக் கூடியவரையில் அதிக அளவில் மனிதன் தரும் எதிர்வினை – இதனால் ஏற்படும் மன நெருக்கடியே. காம உணர்வு நெருக்கடியிலிருந்து விடுதலை பெறுவது பற்றி ஃபிராய்டு கூறும் விளக்கத்தை ஃபிராங்க்ல் மறுக்கிறார். காரணம், இத்தகைய காம அனுபவம், விலங்கின் தரத்தைச் சார்ந்தது. ஃபிராங்க்ல்லின்படி மனிதனின் உடலியல் காமம், உடலியல் ரீதிக்கு அப்பாற்பட்ட பரிமாணங்களின் வெளிப்பாடாக அமையும்பொழுதே, 'காமத்தின் மனித உள்ளுறை' நிறைவு பெறுகிறது. இந்த மனவியல் பாலுணர்வுக்குப் பெயர் காதல் : அன்பு : இன்னொரு மனிதரைத் தன் ஆளுமையின் உள்மையத்தில் இழுத்துக்கொள்வதற்கான ஒரே வழி இதுதான். 'அன்பின் வாகனமாக இது மாறியவுடன் – அன்பின் வாகனமாக இது நிலை பெறும்வரை, பாலுணர்வு அல்லது காமம் என்பது நியாயமானது : புனிதமானதும் கூட.' அன்பு வாழ்வுக்கான பொருளைத் தருகிறது. ✻

(1187 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேலே கொஞ்சமேனும் அசையமுடியாமல் பாறைகளில் செயலற்று ஒதுங்கிக் கிடக்கிறது. நீட்சியையும் பசைபோன்ற கெட்டியற்ற தன்மையையும் கொண்ட ஒத்த தோற்றத்தை, மூன்று கடிகாரங்களும் வெளிப்படுத்துகின்றன. இந்த 'பிசைந்த மா'த் தன்மை நான்காவது கடிகாரத்தின் உலோகத் திண்மையிலிருந்தும், மரத்தின் வரண்ட தன்மையிலிருந்தும், பாறைகள் நிறைந்துள்ள கரையோரத்தின் சமச்சீரற்ற தன்மையிலிருந்தும், வேறுபடுத்திக் காட்டப்படுகின்றது. பூரண அமைதி நிலவுகின்றது. ஒளியும் நிழலும் மெதுவாக ஊர்வன போல் தோன்றுகின்றன. தெளிவான கண்ணாடி போன்ற இந்த ஓவியத்தில், எதுவும் அசைவதாகவிருந்தால், அது சுறுசுறுப்பற்று, பசைத் தன்மையுடன் படர்கிற தன்மையுடனேயே அசைகின்றது. இடது பக்கத்திலுள்ள கட்டையும் (block) விறைப்புற்றிருக்கும் அடி மரமும், வலது பக்கத்தின் முன்செல்லும் அசைவியக்கத்தை எதிர்க்கின்றன. தேனைப் போன்று துளிகளாகச் சொட்டும் காலத்தை அரித்துத் தின்று சுறுசுறுப்பாக ஊர்ந்து செல்லும் எறும்புக் கூட்டங்கள், மந்தம் நிறைந்த சோம்பல் தன்மையின் தோற்றத்தை முனைப்பாக்குகின்றன. மொத்தத்தில், உறுதியானதும் அசைவியக்கமற்றதுமான ஒன்று ஓடும், ஊரும், நீட்டப்படும், ஆற்றொழுக்காகச் செல்லும் – விதிவிலக்கின்றி இந்தச் சொற்கள் காலத்தின் ஓட்டத்தினை, பெயர்ச்சியினைக் குறிப்பிடுகின்றன – ஏதோவொன்றிற்கு எதிரிடையாக முன்வைக்கப்படுகிறது. இதேவேளை எல்லாக் கடிகாரங்களும் சொட்டும் நிலையில் காட்டப்படுகின்றன. இங்கு நாம் எதிர்கொள்வது, அளவிடப்படக் கூடிய காலத்திலிருந்து (measurable time) வேறுபட்ட தனியொருவரின் கால உணர்வையே (personal time) – இதனை தன்தன் விருப்பத்துக்கேற்ப ஒவ்வொருவரும் நீடித்திழுக்கலாம். நாம் எம்முடன் இழுத்துச் செல்லும் நினைவும் கடிகார நேரம் செல்லுபடியாகாத, ஒரு மண்டலத்தைச் சார்ந்ததே." ✻

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெயில் பஸ் தம்பதி

ஸய்யத் முஹம்மத் ஃபாரூக்

மழைத்தூறல் ஒய்ந்து திடீரென வெளித்தவானில் நடுஉச்சியிலிருந்து நகரும் சூரியனின் சுரீரிடும் கிரணங்கள். தார் ரோட்டின் ஈரம் ஒட்டுஒட்டாய்ச் சிதைந்து உலர்கின்றது. முழுகிக் கரையேறிய பெண்களின் துடைத்துத் துவட்டிய கூந்தல் போல் சிலிர்த்துப் படர்ந்த காட்டுமரங்கள். இன்னொரு மருங்கில் சாலையோடு நெளியும் நெடுவயலின் பசிய புன்னகை.

கண்ணுக்கெட்டிய தூரத்தில் பஸ்ஸை இன்னும் காணோம்.

நான் – நண்பர்கள் இருவர்.

சுற்றுச் சூழலின் ஈடுபாட்டில் பிரயாணக் கவலை மறக்கின்றது.

மேட்டிமையாய் நிற்கும் சீகிரியாக் குன்றின் கம்பீரம் – வெண்மேகத் துண்டுகள் போல் உச்சியில் மனித அசைவுகள்.

பாறையைப் பகைப் புலனாய்ப் பின் தள்ளி விட்டு, 'கிரவல்' பாதையில் வேகமாய் வரும் இரு ட்டுவரிஸ்ட் கார்கள் – தார் ரோட்டைத் தொட்டு, எம்மையும் தாண்டி ரெஸ்ட் ஹவுஸ் கேட் வழியாய் நுழைகின்றன. இரண்டு வெள்ளைக்கார ஜோடிகள் இறங்குகின்றனர். அப்போதைக் கப்போது வாசலையடையும் கார்களில் ட்டுவரிஸ்ட்டுகள் வந்திறங்கியவாறும் கிளம்பியவாறும் .....

ரெஸ்ட் ஹவுஸ். மேசைகள் தோறும் ட்டுவரிஸ்ட்டுகள். மதிய போசனம் நிறைவுறுந் தறுவாய். ஒருசிலர் பியர் அருந்திக் கொண்டிருக்கின்றனர் – அவர்களைச் சுற்றிப் புகைமண்டலம்.

வெளியே, மார்புயர மதிலோரத்தில், வேடிக்கை பார்க்கும் கிராமத்துப் பையன்கள்.

தூரத்தில் பஸ்ஸின் ஹுங்காரம். நம் மூவர் பார்வை எதிர்த்திசையில் திரும்புகிறது. வந்து சேர்கிறது பஸ்.

ரெஸ்ட் ஹவுஸ் அருகில் அநேகர் இறங்குகின்றனர்.

பஸ், டெர்மினஸ் நோக்கி அசைந்து நகர்கிறது.

பஸ்ஸைப் பின் தொடர்கிறோம் நாம். ஓட்டமும் நடையும். எமக்கு சிற் பிடிக்கும் அவசரம். டெர்மினஸ்ஸில் பஸ் திருப்பி நிறுத்தப்படுகிறது. ஒரு மணிக்கு மாத்தளைக்குத் திரும்பிச் செல்லும் பஸ் அது. மூவரும் ஏறி சௌகர்யமாய் அமர்கிறோம். எனக்கு சீற் 'ஷட்டர்ஸ்' ஓரத்தில். வழி நெடுகிலும் எதிர்ப்பட்டு மறையும் காட்சிகளை அனுபவித்துச் செல்வது ஓர் அலாதியான ஆனந்தம்தான்.

பஸ் புறப்பட இன்னும் அரைமணி நேரம் ஆகும். இப்போதைக்கு பஸ்ஸுக்குள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயணிகள் நாம் மூவர் மட்டுமே. எம்மைத் தவிர்த்து, 'ஃபிளைங் ஸ்கொட்' - டிக்கட் பரிசோதகர் நால்வர், ட்ரைவர், கண்டக்டர் - அவர்களுக்கிடையில் சம்பாசணை சுருதி தட்டுகிறது. சூழலை மறந்து அன்னியோன்யத்தில் சரஸ சல்லாப பேச்சுகள் - கசிப்பு, சாராயம் முதற்கொண்டு கள்ளப் பெண்டாளுதல் வரை... வெகு சுவாரஸ்யம். உடம்பு நமைச்சலைச் சொறிந்து விடுகையில் உண்டாவது போன்ற சுக லாகிரியில் வாயெல்லாம் பற்களாக அவர்கள் இறங்குகின்றனர். போசன பானத்திற்காகப் போகிறார்கள் போலும்.

பக்கத்தில் உள்ளது ஒரே ஹொட்டேல்.

நாம் சாப்பிடவில்லை. வெறும் பிளேன் டீயை மண்டிவிட்டு வந்தோம்.

அன்று கிறிஸ்மஸ் பண்டிகை. விடுமுறை நாள். செவ்வாய்க்கிழமை - A. B. M. டே. Anti Ballisti Missiles அல்ல - அல, பத்தல, மஞ்ஞொக்கா - வற்றாளை, மரவள்ளி பரிமாறும் தினம்.

ஆளுக்கொரு சிகரெட்டை ஊதி ஆசுவாசங்கொள்கிறோம். ட்ரைவர், கண்டக்டர், பரிசோதகர்கள் பஸ்ஸை, நோக்கித் திரும்புகின்றனர். பயணிகள் ஏழெட்டுப் பேர் வந்து சேர்கின்றார். மணி ஒன்றாகி விட்டது. டிக்கட் கிழிபடுகின்றது. சோம்பல் முறிப்பது போன்ற ஓர் உசும்பல் - பஸ் புறப்பட்டுவிட்டது.

இது மெயில் பஸ்.

தபால் நிலையத்தில் மெயில் பை பெற்றுக்கொள்ள வேணும். விடுமுறை தினமாகையால் மெயில் கிடைக்குமா, கிடைக்காதா சந்தேகம் - ட்ரைவருக்கும் கண்டக்டருக்கும்.

பயணிகளில் ஓர் இளைஞன் - சீகிரியா தபால் நிலையத்தில் கடமையாற்றும் பியோன் - அன்று மெயில் கிடையாது என்கிறான். அவர்களுக்குத் திருப்தியில்லை. தபால் நிலையம் நெருங்க, பஸ் வேகம் குறைகிறது. பியோன் ஒருவன் சிவில் உடையில் சைக்கிளில் வெளிப்படுகிறான். ''நான் சொல்வது பொய்யென்றால் அதோ அவனைக் கேளுங்கள்.'' ட்ரைவர், கண்டக்டருடன் அந்த இளைஞனும் கோரஸ் சேர்கிறான்: ''அத மெயில் தியன வத?''

''அத நிவாடு தவஸ, மெயில் நே'' - ஒற்றைக்காலை நிலத்தில் ஊன்றி சைக்கிளை நிறுத்தும் யத்தனத்தில் பியோன் கத்துகிறான்.

தபால் நிலையத்தையும் அவனையும் தாண்டிச் செல்கிறது பஸ். ரெஸ்ட் ஹவுஸ் தாண்டியதும் பஸ்தரிப்பிடம். ஏக அமர்க்களம்.

விருத்தாப்பியத்தின் ஆரம்ப தசையில் ஒரு ட்டுவரிஸ்ட் மாது. பஸ் ரெஸ்ட் ஹவுஸைத் தாண்டும்போது 'பெட்டி படுக்கையோடு' வேகமாக வெளிக்கிளம்பியவள் - அவளும் ஏறுகிறாள்.

ட்ரைவரின் கரிசனை. இடது பக்க வரிசையில் முன் சீட்டில் அவளுக்கு இடம்.

கண்டக்டர் கயிற்றை இழுக்கிறான். டிங், டிங். பஸ் ஸ்டார்ட்.

மூன்றடி தூர நகர்ச்சி. சடார் - பிரேக்.

பயணிகளை ஒரு குலுக்கு குலுக்கிவிட்டு ஸ்தம்பித்து விடுகிறது பஸ். பயணிகளுக்கு இருப்புக்கொள்ளவில்லை. என்ன விபத்தோ? பஸ் யார் மீதேனும் மோதிவிட்டதோ? ஊகம் பொய்க்கிறது.

பதினாறு வயது இளம் பெண்ணொருத்தி பஸ்ஸில் பாய்ந்தேற முயற்சிக்கிறாள். கறுத்த முரட்டுப் பெண் கரமொன்று அவளை வெளியில் நின்று பற்றியிழுக்கின்றது. பின்னணியில் ஒரு குடும்பப் பட்டாளம்.

பீறிட்டு வெடிக்கும் முரட்டுத்தனமான அழுகையோடு, அம் முரட்டுப் பிடியிலிருந்து திமிறி விடுபட்டு பஸ்ஸில் ஏறி அமர்ந்து விடுகிறாள் இளம்பெண். மற்றவள் விட்டபாடில்லை. பஸ்ஸுக்குள் நுழைந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளைப் பிடித்திழுக்கிறாள். ஒரே குழப்பம். ட்ரைவருக்கும், கண்டக்டருக்கும் செய்வ தறியாத தடுமாற்றம். பயணிகளுக்கோ பஸ் சுணங்குகிறதே என்ற அங்கலாய்ப்பு.

பயணிகளில் நடுத்தர வயதுப் பெண் மணியொருத்தி, இளம் பெண் சார்பில் தலையிடுகின்றாள்: ''அவளை விடுங்கள். பலாத்காரம் வேண்டாம். நீங்கள் யார்?''.

''அனே தெய்யனே – எல்லோரையும் கும்பிடுகிறேன். நான் வேறுயாருமல்ல; இவளுடைய மாமியார்தான். என் மகனைத் தான் இவள் கட்டியிருக்கிறாள். ஐயோ– குடும்ப விவகாரத்தைச் சந்திக்கிழுக்கா தீர்கள். என்னுடன் சண்டை போட்டுக் கொண்டு வந்திருக்கிறாள். இவ்விதம் இவளைப் போகவிடமாட்டேன். சமாதா னமாக நானே அனுப்பிவைக்கிறேன். இவளது உடுபிடவைகளையெல்லாம் அப்ப டியப்படியே போட்டுவிட்டு வந்து விட் டாள். கெஞ்சிக் கேட்கிறேன் இவளை இறங்கச் செய்யுங்கள்.'' – கூப்பிய கரங் களோடு குழைகிறாள் அந்தக் கறுப்பி.

''நானும் ஒரு பயணி. என்னை இறங்கச் சொல்ல யாருக்கும் உரிமையில்லை. நான் இறங்க மாட்டேன்.'' விசும்பலுக் கிடையில் இளம் பெண்ணின் பிடிவாதம்.

பயணிகளுக்கிடையில் குசு குசு வென அபிப்பிராயப் பரிமாற்றங்கள். ஒன்றிரண்டு அவசரக்குடுக்கைகள் எரிச்சலைக் கொட்டு கின்றன. இரண்டு பேரையுமே இறங்கச் சொல்லுகிறான் கண்டக்டர். நடக்கிற காரியமாக இல்லை.

ட்டுவரிஸ்மாது விவரமறியாமல் எல் லோர் முகங்களையும் மாறி மாறிப் பார்க் கின்றாள்.

ஒரு முரட்டு மனிதன் பஸ்ஸுக்குள் பாய்ந்தேறுகிறான். பாய்ச்சலிலே தான் வேகம். நயமான பேச்சு. கறுப்பியை அமைதியடையச் செய்து, இளம் பெண்ணை இறங்குமாறு பரிவுடன் கேட்கிறான்.

இளம் பெண் மசிவதாக இல்லை. உணர்ச்சி கொந்தளிக்கக் குலுங்கிக் குலுங்கி அழுகிறாள்.

நேரத்தைப் பற்றிய கவலை அனைவரை யும் ஆட்கொள்கிறது.

இதுவரை பஸ்ஸுக்கு வெளியே அமை தியாக ஒதுங்கி நின்ற ஓர் வாலிபன், மருள் வந்தவன் போல் திடீரென ஆக் ரோஷங் கொண்டு பஸ்ஸுக்குள் தாவி, இளம் பெண்ணை அலாக்காகத் தூக்கிக் கொண்டு இறங்குகின்றான்.

''கலவரப்பட வேண்டாம்; பெண் ணின் புருஷன் அவன்– என் மகன்தான்'' என்கிறாள் கறுப்பி, கீழே இறங்கிக் கொண்டே.

நிம்மதிப் பெருமூச்சாக இரைந்து கொண்டு, மீண்டும் புறப்படுகிறது பஸ். இரண்டு மைல் தூரம் வந்தாச்சு. கிபிஸ்ஸை உபதபால் நிலையம் நெருங்குகிறது. அங்கி ருந்து மெயில் பையைத் தூக்கிக்கொண்டு ஓடி வருகிறான் பியோன்.

ட்ரைவருக்குப் பகீரென்கிறது. இங்கே மெயில் உண்டென்றால், சிகிரியாவிலும் மெயில் இருக்கத்தானே வேணும். திரும் பிப் போய் அங்கே மெயில் பையைப் பெற்று வருவதுதான் உசிதம். வேறு வழியில்லை.

பயணிகள் கீழேயிறங்கி பஸ் திரும்பி வரும் வரை காத்திருக்க வேணுமாம். முணு முணுத்தபடி எல்லோரும் இறங்கு கின்றனர். ட்டுவரிஸ்ட் மாதுக்கு விவரம் புரியவில்லை.

நாம் இறங்குவதற்காக ஆசனத்தை விட்டு எழுகிறோம். அவளிடத்தை நெருங் கும் போது நண்பர்களிலொருவர் அவளிடம் ஆங்கிலத்தில் கூறுகிறார்:

''பஸ் மீண்டும் சிகிரியா நோக்கிச் செல்கிறது. திரும்பி வரும்வரை நாம் இறங்கிக் காத்திருக்க வேண்டும்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'' ஓ , அப்படியா? '' – பெட்டி படுக் கையைத் தூக்கிக் கொண்டு பரபரப்புடன் இறங்குகிறுள்.

சீகிரியா நோக்கித் திரும்புகிறது பஸ்.

ட்ரைவர் மீதும் கண்டக்டர் மீதும் பயணிகளின் வசைபுராணம் – '' ஒக்கம கொட்ட உட''. சில அங்காடிகளின் தூசணங் கலந்த அரசியல் விமர்சனங்கள்.

'' பஸ் ஏன் திரும்பிச் செல்கிறது? '' — நண்பரிடம் ட்டுவரிஸ்ட் மாதின் கேள்வி. நடந்ததை விவரிக்கிறுர் நண்பர். நல்ல நகைச்சுவை. அவள் வாய்விட்டுச் சிரிக் கிறுள்.

'' ஓகோ, இப்போது புரிகிறது. ஸ்டாம்புகள் வாங்குவதற்காக நானும் இன்று போஸ்ட் ஒபிஸ் போனேன். இன்று விடுமுறை தினம் ஒன்றும் பெற முடியாது என அறிவித்து விட்டார்கள். ''

'' வாஸ்தவம். விடுமுறை தினமென் ருல் தபால் நிலேயம் மூடியிருக்கும். டெலி வரியும் கிடையாதுதான். ஆனல் மெயில் அனுப்புவது தடைபடுவதில்லே. இன்றைய அசம்பாவிதம் விந்தையிலும் விந்தை. '' என்கிறேன் நான்.

ட்டுவரிஸ்ட் மாது அமெரிக்காவிலி ருந்து வந்தவள். எமக்கிடையில் சம்பா ஷணைப் பந்து உருள்வது கண்டு ஆங்கிலம் அறிந்த இன்னெரு பெண்மணி எம்மை அண்டுகிறுள்.

ரெஸ்ட் ஹவுஸ் அருகில் பஸ்தரிப்பி டத்தில் ஏற்பட்ட ரகளே பற்றியும், அவ் விளம் பெண் பற்றியும் விசாரிக்கிறுள் ட்டுவரிஸ்ட் மாது. அவ்விவகாரத்தை அவளுக்கு விளக்க முற்படுகிறுள் எம்மை அண்டிய பெண்மணி. இளம் பெண்ணுக் காக அனுதாபப் படுகிறுள் ட்டுவரிஸ்ட் மாது. அவள் அணிந்துள்ள பட்டிக் கவுன் மலேசியாவில் வாங்கியதாம். சீகிரியாவின் இயற்கை வனப்பு அவளே வெகுவாகக் கவர்ந்து விட்டதாம். ரெஸ்ட் ஹவுஸில் இரண்டு நாள் தங்கினுளாம். மேலதிகமாக இன்னெருநாள் தங்கும் ஆசை நிறை வேருது போய்விட்டதாம். அநேக ட்டுவ ரிஸ்ட்டுகள் முன்கூட்டியே இடம் ' புக் ' பண்ணியுள்ளபடியால், ' எக்ஸ்டென் ஸன்' மறுத்து விட்டார்களாம்.

மாத்தளே போய், அங்கிருந்து கண் டிக்கு பஸ் பிடிப்பது அவள் நோக்கம். குயீன்ஸ் ஹொட்டேலில் தங்கும் உத்தேச மாம்.

செலவழிந்து போன நேரத்தை ஈடு கட்டும் வகையில், திரும்பிவரும் பஸ்ஸின் வேகம்.

பஸ் நின்றதும் எல்லோரும் முண்டிய டித்துக் கொண்டு ஏறுகின்றனர்.

என்ன அதிசயம் – ரகளே பண்ணிய அந்த இளம் பெண்ணும், அவளேத் தூக் கிச் சென்ற அந்த வாலிபனும் ட்டுவரிஸ்ட் மாது முன்னர் அமர்ந்திருந்த சீட்டில் – அழுது வீங்கியிருந்த முகத்தில் ஓர் அசட் டுப் புன்னகை.

மெயில் பை எடுத்து வந்த அறிகுறி யைக் காணும்.

'' சீகிரியா தபால் நிலேயத்தில் மட்டும் காசியப்பன் காலத்துச் சட்டம். இன்று மெயில் பை தரமாட்டார்களாம்.'' – ஏமாற்றத்தை மறைக்கும் ட்ரைவரின் சாதுர்யம்.

எங்கள் எல்லோரையும் அந்தரிக்க விட்டு, பஸ் அலறிப் புடைத்துக் கொண்டு திரும்பிச் சென்றது மெயில் பையை எடுத்து வருவதற்காகவா? அல்லது அந்த இளம் தம்பதிகளே ஏற்றிக் கொண்டு வருவதற்காகவா?

தெய்வச் செயல் என்பது இதுதான் போலும்!

இளம் தம்பதிகளே மீண்டும் பிரித்து வைக்க மனமின்றி ட்டுவரிஸ்ட் மாது வேறிடம் பார்த்து அமர்கிறுள்.

அவ்விளம் ஜோடி, வெகு சமீபத்தில் மணமானவர்களாய்த்தான் இருக்கவேண் டும்.

கட்டையிலே போகிறவர்களின் அவ சரத்தைவிட, அவ்வாலிபத் தம்பதிகளின் வாழ்க்கைப் பயணம்தானே முக்கியம்.

வருங்காலம் அவர்களுடையதல்லவா?

'' தம்பதிகள் வாழ்க!'' – என் வாய் முணுமுணுக்கிறது.

டிங், டிங் – மணி நாதம்.

புறப்படுகிறது பஸ்.

— (1973) ❋

(1196 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஊழல்களிற்காக இரண்டுமுறை தண்டிக்கப்பட்ட அரசாங்க ஊழியரும், 'ஜனரஞ்சக எழுத்தாளருமான இந்தப் 'பூகராயன்' இவ்வாறு 'இலக்கிய ஊழல்' புரிவதற்கும் ஒரு பின்னணி இருக்கிறது. ஆனல், அதை இப்போதைக்குத் தவிர்க்கிறேன். ❋ ❋

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவுகள்

அ. யேசுராசா

1968 — 69 என்று நினைக்கிறேன். கொழும்பு கலை, இலக்கிய நண்பர் கழகத்தினைத் தோற்றுவித்து நாங்கள் இயங்கிய காலம். மாவை நித்தியானந்தன், தில்லைக்கூத்தன், குப்பிளான் ஐ. சண்முகன், நெல்லை க. பேரன், சாந்தன், சி. வன்னியகுலம் ஆகியோரும் அதில் இருந்தனர். சிங்கள நாடகங்கள் — திரைப்படங்கள், ஓவியக் கண்காட்சிகளை நாங்கள் பார்க்கையில் இவைபோல் எம்மிடை இல்லையே என்ற ஆதங்கம் எழும்; அது கழகச் சந்திப்புகளில் அடிக்கடி வெளிப்படும். தமிழ்த் திரைப்படங்களைப்போல் வெறும் வாய்பாட்டு ரீதியிலானதாக — கேலியையும் கிண்டலையும் முதன்மைப் படுத்துவனவாக — அக்காலத் தமிழ் நாடகங்கள் வெறுப்பூட்டின. அந்தப் பின்னணியில் கடலின் அக்கரை போவோர் (தி. கந்தையா), அவர்களுக்கு வேடிக்கை, இரு துயரங்கள் (நாடோடிகள்) போன்றவற்றைப் பார்க்க நேர்ந்தபோது அதிர்ச்சியுடன் கூடிய சந்தோஷமே மேலெழுந்தது. இன்று — இருபது வருடங்களுக்குப் பிறகு மீள நோக்குகையில், நாடகத் துறையிலானவளர்ச்சி பெருமைப்படும்படியாகவே இருக்கிறது. நா. சுந்தரலிங்கம், அ. தார்சீசியஸ், இ. முருகையன், தில்லைக்கூத்தன், மாவை நித்தியானந்தன், க. பாலேந்திரா, சி மௌன குரு, க. சிதம்பரநாதன், ம. சண்முகலிங்கம், றேமண்ட் என – இவ்வளர்ச்சியைச் சாதித்த பலர் நினைவுக்கு வருகின்றனர். நாடக அரங்கக் கல்லூரியினால் புதியவர்கள் பலர் பயிற்றுவிக்கப்பட்டிருக்கிறார்கள். பாடசாலை மட்டங்களிலும் நாடக இயக்கம் நடைமுறைரீதியாக எடுத்துச் செல்லப்படுகிறது. ஆனாலும்......

அண்மைக்காலங்களில் பார்க்க நேர்ந்த நாடகங்கள் அடிக்கடி எழுப்பிய சலிப்பினைச் சுட்டிக் காட்டவே வேண்டும். வாய்பாடுகளுக்கு எதிராக முனைப்புப்பெற்ற நவீன நாடக இயக்கம் 'புதியதொரு வாய்பாட்டுக்குள்' சிக்கி மூச்சுத் திணறுகிறது. வெளிப்பாட்டு முறைகள் 'ஒன்றுபோலவே' எல்லா நாடகங்களிலும் அமைந்து விடுகின்றன. ஆரம்பத்தில் உறைநிலை – பின் மெல்ல அசைதல் – எடுத்துரைஞர் வருதல் – அவர்களே பெரும்பாலும் மாறிமாறிக் கருத்துரைத்தல் (பெரும்பாலும் கலை நயமற்ற பிரச்சாரம்), எடுத்துரைஞருக்கும் நாடகமாந்தரின் இயக்கத்துக்குமிடையில் இசைவின்மை, போன்றவற்றை இவ்வாறு சுட்டலாம். தற்புதுமையான அனுபவம் எமக்குக் கிடைப்பதில்லை. இது ஏன் நிகழ்கிறது? ஆக்கத்திறனை வளர்த்துக்கொண்டு தமது 'சொந்த அடையாளங்களை' வெளிக்காட்டுவதில், நெறியாளர்கள் அக்கறை காட்டுவதில்லையா? நவீன நாடக வளர்ச்சியில் அக்கறைகொண்டவர்கள் எல்லோருமே கூட்டாகக் கருத்துப் பரிமாறி, வளர்ச்சிக்குரிய அம்சங்களை – வழிமுறைகளை இனங்காண வேண்டியது மிக அவசியமானதென்றே படுகிறது.

*

சென்ற பங்குனி மாதத்தில் நான் சஞ்சிகை எழுத்துப் பட்டறை ஒன்றை ஒழுங்கு செய்திருந்தது. வேறு பல எழுத்தாளர்களுடன் நானும் கலந்துகொண்டேன். மார்ச், 1989 மல்லிகையில் பூதராயன் எழுதிய 'இலக்கியச் சங்கதி' கட்டுரையில் இப்பட்டறையைப் பற்றிய குறிப்பும் வருகிறது. அதில் ஓரிடத்தில், ''ஒருவர் குறிப்பிட்டார்: 'நான் இப்போது சிறுகதைகள் எழுதுவதில்லை. 1977 இற்குப் பின்னர் எழுதுவதில்லை. அப்படியிருக்க என்னை ஏன் கூப்பிட்டார்கள் என்று தெரியவில்லை.'' என்று காணப்படுகிறது. அந்த 'ஒருவர்' பட்டறை அமைப்பாளர்களை, பயிற்சியாளர்களை அவமதிக்கும் முறையில் நடந்துகொண்டார் என்று காட்டுவதே, 'பூதராயனின்' நோக்கம். உண்மையில் அந்த 'ஒருவராகிய' நான் அவ்வாறு பேசவில்லை. பட்டறைப் பேச்சுகள் கொண்ட ஒலிப்பதிவு நாடாவைப் பரிசிலித்து, இதுபற்றிய குறிப்பை 'மல்லிகை'க்கு எழுத வேண்டுமென, 'நான்' சஞ்சிகை ஆசிரியர் குழுவில் இயங்கும் 'யோசப் பாலா' விடம் இரண்டுமூன்று முறை தெரிவித்தும், 'நான்' குழு செயற்படவில்லை. மல்லிகைக்கும், டொமினிக் ஜீவாவுக்கும், (பூதராயனுக்கும்) ஏனோ அவர் பயப்படுவதையே உணர்ந்து கொண்டேன். சுமார் இரண்டு மாதங்களின் முன் அவரே, குறித்த பதிவுநாடாவை என்னிடம் தந்தார். அதில் இவ்வாறுதான் காணப்படுகிறது: ''எனது சிறுகதைத் தொகுப்பு 1974 இல் வெளிவந்தது. அதன் பிறகு நான் சிறுகதை ஒன்றையும் எழுதவில்லை; எழுத முடியவில்லை என்பதுதான் உண்மை. அதன்பின் சில கவிதைகளை எழுதினேன் அது ஒரு தொகுப்பாக வந்திருக்கிறது. நான் எழுதாததற்குக் காரணம் இலக்கியங்களில் – எழுதுவதில் எனக்கு ஆர்வம் குறைந்து விட்டது. அறிவுபூர்வமான விடயங்களிலேயே ஆர்வம் இருக்கிறது. இது ஒரு முக்கியமான விடயமென்றுதான் நினைக்கின்றேன்.''

(1195 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவா ஜுவல்லறி

அம்மன் வீதி,
(சென். ஜேம்ஸ் தேவாலய அருகில்)
பண்டத்தெருப்பு.

தரமான ஜவுளிகளின்
தனிப்பெரும் நிறுவனம்

G. S. லிங்கநாதன்

அன் கோ

79, கே. கே. எஸ். றோட்,
யாழ்ப்பாணம்.

தொ. பே. 24214

நீர் வளையங்கள் (கவிதை)
சண்முகம் சிவலிங்கம்
விலை: இந். ரூபா 16/-

பெண்களின் சுவடுகளில் (ஆய்வு)
சாந்தி சச்சிதானந்தம்
விலை : இந். ரூபா 20/-

எனது இராகங்கள் (கவிதை)
வவுனியா திலீபன்
விலை : ரூபா 15/-

மடிக்குள் விழுந்த வெள்ளிகள் (கவிதை)
நற்பிட்டிமுனை பளீல்
விலை : ரூபா 12/-

முனைப்பு (காலாண்டிதழ்)
பொது நூலக வீதி,
மருதமுனை, கல்முனை.

வியூகம் (காலாண்டிதழ்)
127/4, பிரதான வீதி,
கல்முனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நங்கையர் விரும்பும்
அழகும் தரமும் நிறைந்த நகைகளுக்கு
இன்றே நாடுங்கள் !

NAGALINGAMS JEWELLERS

No. 101, COLOMBO STREET,
KANDY.

அலைக்கு
எமது நல்வாழ்த்துக்கள் !

M. N. RATNASABAPATHY, (J. P.)

குருநகர் 'அன்னை' அச்சகத்தில் அச்சிடப்பட்டு, 'அலை இலக்கிய வட்டத்'தினுல் (48. சுய உதவி வீடமைப்புத் திட்டம், குருநகர், யாழ்ப்பாணம்.) வெளியிடப்பட்டது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org